# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 04.10.2022 | supeedsam.com | supeedsam@gmail.com



நாள் தோறும் சுபீட்சம் மின்னிதழை பார்வையிட

www.supeedsam.com


## கிழக்கு மாகாணத்தை ஆளுநர்
# நாசப்படுத்தியுள்ளார்

கிழக்கு மாகாணத்தில் பால் உற்பத்தி தொழிற்துறையை முழுமையாக கிழக்கு ஆளுநர் மாகாணத்தனை நாசப்படுத்தியுள்ளார் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் தெரிவித்துள்ளார்,

ஆகவே இவ்விடயம் குறித்து விசேட கவனம் செலுத்துமாறு விவசாயத்துறை அமைச்சரிடம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்தில்நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...




## அழிவு காலத்தை நெருங்கியுள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு!

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தாய்க் கட்சியான தமிழ் மக்கள் கூட்டணிக்கு தேர்தல் திணைக்களம் மான் சின்னத்தை வழங்கியுள்ளது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று தமிழ் மக்களிடையே ஒரு விழிப்புணர்ச்சி எழுந்துள்ளது.எமது பங்காளிக் கட்சிகளும் நாமும் ஒரு கூட்டணியாக இதுவரை காலமும் நிலைத்து நிற்பது எமக்கொரு பலமே. தலைவர்கள் ஆணவத்தை களைந்தால் ஒற்றுமை சாத்தியமாகும்.

02 ஆம் பக்கத்தில்...



## பணவீக்கம், எரிபொருள் தட்டுப்பாடே காரணம்

ஆசியாவின் அதிகூடிய பணவீக்க விகிதம் மற்றும் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு ஆகியவை, இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாக தெரிவித்த உலக உணவுத் திட்டம், நகர்ப்புற ஏழைகள் மற்றும் தோட்டத் தொழிலாளர்களைப் போலவே பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

அதிக பணவீக்கம், அதி

02 ஆம் பக்கத்தில்...

## இராவணன் விடயத்தில்
# சரணடைந்த சரத் வீரசேகர!



முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரான சரத் வீரசேகர எம்.பி அண்மையில் வெளியிட்டுள்ள அறிகையொன்றில் 'இராவணன் என்ற அரசன் இருந்ததில்லை என்றோ, இலங்கையில் சிவ வழிபாடு இருந்ததில்லை என்றோ எந்தவொரு இடத்திலும் எதனையும் நான் ஒருபோதும் கூறவில்லை என்று உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

'இராவணன் (இராவணேஸ்வரன் அல்ல) என்று அழைக்கப்படும் ஒரு மன்னன் இலங்கையில் ஆட்சி செய்தவர் என்று நான் உறுதியாக நம்புகிறேன். புராணக்கதைகளின் படி, அவர் இந்தியாவில் சீதையை (இராமரின் மனைவி) கடத்தி, தனது புகழ்பெற்ற யந்திரயாவில் (மயில் விமானம்) இலங்கைக்கு

02 ஆம் பக்கத்தில்...




காந்தி ஜெயந்தி தின நிகழ்வுகள் மட்டக்களப்பு காந்திபூங்காவில் உள்ள மகாத்மா காந்தி சிலையருகில் காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் நிகழ்வு நடைபெற்றது போது இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கலந்து கொண்டிருந்த போது...

## மலையகத்தில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் மண்சரிவு அபாயத்தில் உள்ளது



மலையகத்தில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் மண்சரிவு அபாயத்தில் இருப்பதாக நாடாளுமன்றத்தில் முன்கூட்டியே கூறியிருந்தோம் என தெரிவித்த நுவரெலியா மாவட்ட நாடாளுமன்றத்தில் உறுப்பினர் ஜீவன் தொண்டமான், இவ்வாறு பாதிப்பை எதிர்நோக்கியுள்ள மக்களுக்கு அனர்த்த முகாமைத்து அமைச்சின் ஊடாக தீர்வை வழங்குமாறும் வலியுறுத்தியதாக தெரிவித்தார்.

நேற்று திங்கட்கிழமை கொழும்பில் உள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைமையகமான சௌமியபவனில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,மண்சரிவு அபாய வலயத்தில் வாழ்ந்த காளியம்மா இன்று உயிரிழந்ததைப்

02 ஆம் பக்கத்தில்...

## விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்தில் மைத்ரிபால



நெல்லுக்கு உரிய விலை மற்றும் அடுத்த பருவத்திற்கு உரிய நேரத்தில் உரம் வழங்குமாறு கோரி ஸ்ரீலங்கா சுதந்திர விவசாயிகள் முன்னணி மற்றும் பொலன்னறுவை விவசாயிகள் இணைந்து நேற்று திங்கட்கிழமை காலை பொலன்னறுவையில் கவனயீர்ப்பு போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் அவரது மகன் தம் சிறிசேன ஆகியோர் கலந்து கொண்டு வீதியில் அமர்ந்து தமது ஆதரவை வெளிப்படுத்தினர்.

ஒரு கிலோ கோதுமைக்கு 150 ரூபாய் உத்தரவாத விலையை

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேறெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Französisch, Englisch,Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen

# பேராசிரியர் பாலசுகுமார் அவர்களின் நூல் வெளியீடும் அறிமுகமும்







மகுடம் கலை இலக்கிய வட்டத்தின் 45 வது பௌர்ணமி கலை நிகழ்வுத் தொடராக ஞாயிறு மாலை மட்டக்களப்பு சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தின் உள்ளக அரங்கில் நடைபெற்ற பேராசிரியர் பாலசுகுமாரின் நூல் வெளியீடு மற்றும் அறிமுக நிகழ்வில் அவரது Eezha Natiyam, Inniyam Music Dance of Eezham Tamillans நூலை பிரதம விருந்தினர் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு.க. கருணாகரன் வெளியிட சண்சைன் உரிமையாளர் திரு. நந்தகுமார் பெற்றுக்கொண்டார்.

நூல் பற்றிய நயவுரையை ஆங்கில பாட பயிற்றுவிப்பாளர் திரு. அ. ஜெபராசா ஆற்றினார்.

விழாவிற்கு தலைமை தாங்கிய ஓட்டமாவடி பிரதேச செயலாளரும் கவிஞருமான திரு. வெ. தவராஜா அவர்கள் தலைமையுரையுடன் பாலசுகுமாரின் கறுப்பி சிறுகதை நூல் பற்றிய நயவுரையையும் முறையே

கரைகள் கடந்து (பேராசிரியர் கா. சிவத்தம்பி தொடர்பான ஆய்வு ), ஈழ நாட்டியம் (கட்டுரை) , ஓ. தோழனே நந்தினி(நினைவுப் பகிர்வு) , கொடி எழு அன்னப்புரவி(நாவல்) ,தமிழர் மரபில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடிப்பு முறைமை(கட்டுரை), நஞ்சுமிழும் காளான்கள்( கவிதை) ஆகிய நூல்கள் தொடர்பிலான அறிமுகத்தை சிரேஷ்ட விரிவுரையாளர்கள் கலாநிதி. சு. சீவரெத்தினம், திரு. க. மோகனதாசன், அதிபர் திரு. ச. மணிசேகரன், கவிஞர் செங்கதிரோன், திரு.அருள் செல்லநாயகம் மகுடம் வி. மைக்கல் கொலின் ஆகியோர் நிகழ்த்தினர்.

விழாவின் சிறப்புரையை முன்னாள் பிரதி அமைச்சர் ஜனாப் பசீர் சேகு தாவுத் அவர்களும் நிகழ்வின் வரவேற்புரையை கலாநிதி பிரியா ஜெதீஸ்வரன் அவர்களும் நன்றியுரையை நூலாசிரியர் பேராசிரியர் பாலசுகுமாரும் ஆற்றினர். நிகழ்வை மகுடம் மைக்கல் கொலின் தொகுத்து வழங்கினார்.

## இராவணன் விடயத்தில் சரணடைந்த..

அழைத்து வந்தார். இராவணன் இந்து வரலாற்று நூலான இராமாயணத்தின் முக்கிய எதிரியாக குறிப்பிடப்படுகின்றார்' என்றும் சரத் வீரசேகர எம்.பி தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

திருகோணமலை திருக்கோணேஸ்வர ஆலயத்தின் கடைகளை குத்தகைக்கு வழங்கும் விடயத்தில் இழுபறிநிலைமை ஏற்பட்டுள்ளது. குறித்த கடைகளை பெரும்பான்மையின வியாபாரிகளுக்கு வழங்குவதற்கு தமிழ்த் தரப்பு அரசியல்வாதிகள் மத்தியில் எதிர்ப்பு கிளம்பியுள்ள நிலையில், அது தொடர்பில் கடந்த செப்டம்பர் 22 ஆம் திகதி சரத் வீரசேகர எம்.பி உரையொன்றை ஆற்றியிருந்தார்.

அவர் தனது உரையில் இலங்கையில் இராவணேஸ்வரன் என்ற அரசர் இருந்ததில்லை என்னும் கருத்தொன்றினையும் பதிவு செய்திருந்தார். அக்கருத்து தொடர்பாக தமிழ் சமூக ஆர்வலர்கள் மற்றும் அமைப்புகள் தரப்பிலிருந்து எதிர்ப்புகள் தெரிவிக்கப்பட்டன.

இது தொடர்பாக சரத் வீரசேகர எம்.பி நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'சமூக நல்லிணக்கத்திற்கான தேசிய அமைப்பு' என்ற அமைப்பின் செயற்பாட்டாளர் வினோத் பாலச்சந்திரன் ஊடகங்களுக்கு தமது அமைப்பின் ஊடக அறிக்யொன்றினை வழங்கியிருந்தார்.

குறித்த ஊடக அறிக்கையில் இராவணன் என்ற அரசன் இல்லை என்றும், இலங்கையில் சிவ வழிபாடு இல்லை என்றும் நான் கூறியுள்ளதாக குறிப்பிட்டிருந்தார்.

செப்டெம்பர் 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நான் ஆற்றிய உரையை கவனமாகக் கேட்குமாறு சமூக நல்லிணக்கத்திற்கான தேசிய அமைப்பினரையும், அதன் செயற்பாட்டாளர் பாலச்சந்திரனையும் கேட்டுக் கொள்கிறேன். எனது உரையில் எந்தவொரு இடத்திலும் இராவணன் என்றழைக்கப்படும் அரசன் இல்லை என்றோ சிவவழிபாடு சம்பந்தமாக எதனையுமோ நான் ஒருபோதும் கூறவில்லை. இராவணேஸ்வரன் என்று ஒரு அரசன் இருந்ததில்லை என்றே கூறியுள்ளேன்.

பாலச்சந்திரன் என்னை இனவாதி என்று கூறி, சிறுபிள்ளைத்தனமாக இராவணன் உண்மையில் இருந்தான் என்பதை ஆவணங்களில் உள்ள பல்வேறு புத்தகங்களைக் குறிப்பிட்டு நிரூபித்துக் காட்டுகிறார். இராவணன் என்று ஒரு மன்னன் இல்லை என்று நான் ஒருபோதும் குறிப்பிடாமையினால், அவருடைய முழு அறிக்கையும் அர்த்தமற்றதாகிறது.

இராவணன் (இராவணேஸ்வரன் அல்ல) என்று அழைக்கப்படும் ஒரு மன்னன் இலங்கையில் ஆட்சி செய்தவர் என்று நான் உறுதியாக நம்புகிறேன். 'ரா' – என்றால் சூரியன் மற்றும் வன –என்றால் வன்ஷயா அல்லது பழங்குடி என்று அர்த்தமாகும். எனவே இராவணன் என்றால் 'சூரியனின் பழங்குடி' என்று பொருள். அவர் எல்லாத் திறமைகளிலும் கலைகளிலும் வல்லவராக இருந்தார். மன்னன் இராவணன் எப்போதும் இராவணன் என்றே அழைக்கப்படுகிறார், இராவணேஸ்வரன் என்று அல்ல.

பாலச்சந்திரன், சமூக நல்லிணக்கத்தில் உண்மையாக அக்கறை கொண்டவராக இருந்தால், கண்ணியமான, அமைதியை விரும்பும் ஒட்டுமொத்த தமிழ் சமூகத்துக்கும் அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்வதைத் தவிர்க்குமாறு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களை (பெரும்பாலும் TNA மற்றும் ACTC) கேட்டுக் கொள்ள வேண்டும். அப்படிப்பட்ட தமிழ் எம்.பி ஒருவர் இராவணேஸ்வரனைக் குறிப்பிட்டு தனது இனவாதச் செயலை நியாயப்படுத்த முயன்றார். அதனால்தான் அப்படிப்பட்ட ஒருவரைப் பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை என்றேன்.

முல்லைத்தீவு குருந்து விகாரையில், தொல்பொருள் திணைக்களத்தினால் புனரமைக்கப்பட்ட 2000 வருடங்கள் பழைமையான தூபி உள்ளது. புத்தரின் திருவுருவங்களை அதில் வைப்பதற்கு சமய வைபவம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது, ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்.பி.க்களின் குண்டர் குழுக்கள் அதற்கு அனுமதிக்கவில்லை. மேலும் தூபிக்கு ஒரு மலர் கூட வைக்க முடியாமல் தலைமைப் பீடாதிபதிகளும் மகாசங்கத்தினரும் திரும்பிச் செல்ல வேண்டியிருந்தது. இரண்டு வாரங்களுக்கு முன்பும் இதே குண்டர்கள் குழுக்கள் அதிகாரபூர்வமான இடத்தை ஆய்வு செய்வதற்கு வருகை தந்த குழுவைத் தாக்கி விரட்டியடித்தனர்.

போரின் உச்சக்கட்டத்தில் அம்பாறை கோணகை திருகோணமலையில் கோணேஸ்வரர் கோயிவிலுக்குச் செல்லும் வீதியில் 60 பெட்டிக்கடைகளில் சிங்களவர்களே அதிகம் காணப்படுகின்றனர். தினமும் ஏராளமான உள்ளூர் மற்றும் வெளியூர் சுற்றுலாப் பயணிகள் கோயிலுக்கு வந்து செல்கின்றனர். குறித்த பெட்டிக்கடைகள் பொலித்தீன் மற்றும் மரத்துண்டுகளால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதனால் கடலின் அழகு பார்வைக்கு இடையூறாக உள்ளது. இதனை மறுபுறம் மாற்றி புதிய ஒரு ஒழுங்கில் நிர்மாணிப்பதற்கு ஆளுநர் முடிவு செய்துள்ளார்.

குறித்த கடைகளை அதே நபர்களுக்கு கொடுக்க திருக்கோணஸ்வர கோயில் குழு உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் அனுமதி வழங்கியபோதும், தமிழ்த் தரப்பு எம்.பி.க்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவித்து அங்குள்ள அனைத்து சிங்களவர்களின் கடைகளையும் அகற்றுவதற்கு முயற்சித்துள்ளனர். தங்கள் வாதத்தை நியாயப்படுத்த இராவணேஸ்வரன் என்ற அரசனைக் குறிப்பிட்டார்கள்.

பாலச்சந்திரன் உண்மையில் சமூக நல்லிணக்கத்தில் அக்கறை கொண்டிருந்தால், என்னை இனவாதி என்று கூறும் முன், அது தொடர்பாக நான் பாராளுமன்றத்தில் ஆற்றிய அனைத்து உரைகளையும் முழுமையாக கேட்குமாறு கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

பாலச்சந்திரனின் தகவலுக்கு இன்னுமொன்றினை கூறிக்கொள்கின்றேன். நான் கடற்படையில் பணியிலிருந்த காலத்தில் வடக்கு, கிழக்கில் பல வருடங்கள் கடமையாற்றியுள்ளேன் என்று கூறுவதை பொருமையாகக் கருதுகிறேன். நானும் சிங்கள பௌத்த சகாக்களும் பல சந்தர்ப்பங்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழ் மக்களுக்கு இரத்த தானம் செய்துள்ளோம். அப்படியானால் யார் உண்மையான இனவாதிகள் என்று கேட்டுக் கொள்கின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## விவசாயிகளின் ஆர்ப்பாட்டத்தில் மைத்ரிபால

வழங்குமாறும் கோரி முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் பல பகுதிகளைச் சேர்ந்த விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

சுமார் ஒரு மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற்ற இந்த போராட்டத்தில் ஐநூறுக்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மலையகத்தில் மூவாயிரத்துக்கு மேற்பட்ட வீடுகள் மண்சரிவு...

போன்று, நாளை மண்சரிவு அபாயத்தில் உள்ள பகுதிகள் பாதிக்கப்படும் வாய்ப்புகள் அதிகம். எனவே, இது தொடர்பில் பிரதமருடன் கலந்துரையாடியுள்ளதுடன், ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார்.

மேலும் காணி அமைச்சர் ஹபீனுடனும் தனிப்பட்ட ரீதியில் தொலைபேசியில் தொடர்கொண்டு பேசியதாகத் தெரிவித்த அவர் இதற்கு உடனடியாக தீர்வை எடுக்க வேண்டும் என்றும் ஏனெனில் நாட்கள் செல்ல செல்ல இதன் ஆபத்து அதிகம் என்றார்.

பாடசாலையில் நடைபெறும் விழாக்களுக்கு மாணவர்களிடம் பணம் அறவிடுதல் முறையாகாது. மாணவர்கள் அடித்து துன்புறுத்துவதை ஒருபோது ஏற்றுக்கொள்ள முடியாது ஒரு விடயமாகும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். போகாவத்தை பாடசாலை அதிபர் குறித்த பாடசாலையில் கல்வி கற்றும் மாணவியொருவரை அடித்த சம்பவத்தை அடுத்து பாடசாலை அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். மேலும், போகாவத்தை பாடசாலை அதிபர் ஆசிரியர் தின விழாவுக்காக 300 ரூபாவை செலுத்தாத காரணத்தினால் மாணவியொருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் கல்வி அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்திவின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளேன்.

பாடசாலையில் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்வுகளுக்காக பணம் அறவிடுதல் முறையாகாது. இதனைக் காரணம் காட்டி மாணவர்களை அடிப்பதோ, திட்டுவதோ நியாயமானதல்ல. இவ்வாறான விடயங்கள் உங்களது பாடசாலைகளில் இடம்பெறுமானால், அது குறித்து சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடமோ அல்லது பொலிஸ் நிலையங்களிலோ முறைப்பாடு செய்யுங்கள்.

இது சமூகப் பிரச்சினையாகும், இதனை அரசியல்வாதிகள் தலையிட்டு தீர்க்கும் பிரச்சினை அல்ல.

ஒரு சில அதிபர், ஆசிரியர்களின் தவறான செயற்பாடுகள் ஒட்டு மொத்த அதிபர், ஆசிரியர்களுக்கும் அவப் பெயரை ஏற்படுத்திக் கொடுத்து விடுகிறது. என்றார்.

## பணவீக்கம், எரிபொருள் தட்டுப்பாடே காரணம்

கரித்து வரும் விலைவாசி ஏற்றம், மின்வெட்டு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு போன்றவற்றால், முன்னெப்போதும் இல்லாத பொருளாதார நெருக்கடியை இலங்கை தொடர்ந்து அனுபவிப்பதாக உணவுத் திட்டம் குறிப்பிட்டது.

சமீபத்தைய அறிக்கைக்கு அமைய இலங்கையில் 6.2 மில்லியன் மக்கள் மிதமான மற்றும் கடுமையான உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையிலுள்ள 10இல் 4 குடும்பங்கள் நாளாந்த உணவு வேளையை குறைத்துள்ளதுடன், செலவுகளை குறைத்தல், மருத்துவ செலவுகள் மற்றும் பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பாதிருத்தல் போன்ற எதிர்மறையான சமாளிக்கும் உத்திகளைப் பயன்படுத்துவதாகவும் கவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் சீரழிந்து வரும் உணவுப் பாதுகாப்பு, போஷாக்கு நிலைமை மற்றும் எதிர்வரும் பெரும்போகத்தில் போதிய அறுவடை கிடைக்காது என்ற வலுவான சாத்தியக்கூறுகள் தென்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, பல நாடுகள் குறிப்பாக உணவு பாதுகாப்பை மேம்படுத்துவதற்கு மேலதிக உதவிகளை வழங்குவதாக குறித்த அலுவலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரம் (யூஎஸ் எயிட்) மேலதிகமாக 20 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியை அறிவித்த நிலையில், அந்த முகவரகத்தால் ஏறக்குறைய 92 மில்லியன் டொலர்கள் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஐக்கிய இராச்சியம் 3 மில்லியன் ஸ்ரேலிங் பவுண்ட் பெறுமதியான உதவிகளை வழங்கவுள்ளதுடன், ஐரோப்பிய ஒன்றியம் 1.5 மில்லியன் யூரோக்களை மனிதாபினமான உதவியாக அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## அழிவு காலத்தை நெருங்கியுள்ள

எமது கூட்டணித் தலைவர்கள் நடைமுறைக்கேற்றவாறு நடந்து கொள்ளும் பண்பு தெரிந்தவர்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று சிதையத் தொடங்கியுள்ளது.

கூட்டமைப்பின் பலமும் ஒருமைப்பாடும் ஒரு சிலரின் தன்னிச்சையான நடவடிக்கைகள் காரணமாகப் பாதிப்படையத் தொடங்கியது.

நான் வெளியேறியதும் அதனை சகிக்க முடியாமல்தான். அங்கு பிரிவு ஏற்படும்போது இங்கு ஒருமையும் ஒற்றுமையும் ஏற்படுவதே சாலச் சிறந்தது. ஆகவே, எமது தேசியக் கூட்டணி தொடரும் பலமுடன் தொடரும். மானா மீனா என்பது இன்னும் முடிவெடுக்கப்படவில்லை.

எமது புரிந்துணர்வின்படி அது மீன். எமது கட்சியின் அண்மைய பதிவின் பின் அது மானாகவும் மாறலாம். தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் வேறு கட்சிகள் சேர்ந்து தேர்தலை சந்திக்கும் பட்சத்தில் அவர்களின் கோரிக்கையை பொறுத்து மீன் சின்னத்துக்கு பதில் மான் சின்னத்தில் போட்டியிட வாய்ப்பு உள்ளது எனவும் தெரிவித்தார்.

## கிழக்கு மாகாணத்தை ஆளுநர் ...

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒருசில பகுதிகள் மேய்ச்சல் நிலங்கள் என இதுவரை வர்த்தமானி வெளியிடப்படவில்லை.

வியத்மக அமைப்பின் உறுப்பினரான கிழக்கு மாகாண ஆளுநர் கிழக்கு மாகாணத்தை முழுமையாக நாசப்படுத்தியுள்ளார். இந்த மேய்ச்சல் நில பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநர் முறையாக செயற்படவில்லை.

நாட்டில் விவசாயத்துறை வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் பால் உற்பத்தி தொழிற்துறையும் வீழ்ச்சியடைந்து செல்கிறது. பால் உற்பத்தியாளர்கள் மேய்ச்சல் நிலம் இல்லாத காரணத்தினால் பெரும் அசௌகரியங்களை எதிர்க்கொண்டுள்ளார்கள்.

மயிலடுத்துறை பகுதியில் அத்துமீறிய வகையில் ஒரு தரப்பினர் கூடாரமிட்டுள்ளார்கள். இச்செயற்பாடுகளுக்கு எதிராகவே நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தோம்,இவர்களை மீண்டும் அழைத்து வருவதில்லை என பொறுப்பான தரப்பினர் குறிப்பிட்டதன் பின்னரே வழக்கை மீளப் பெற்றோம். தற்போது மீண்டும் வழக்கு தாக்கல் செய்ய நேரிடும். என தெரிவிதார்.

இதன்போது எழுந்து உரையாற்றிய விவசாயத்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர, இவ்விடயம் தொடர்பில் மகாவலி அதிகார சபைக்கும், கிழக்கு மாகாண ஆளுநருக்கும் அறிவிக்கிறோம்.

இவ்விடயத்தில் உணர்வுபூர்வமாகவும், பிரச்சினையற்ற வகையிலும் தீர்வு காணுமாறு ஆளுநருக்கு உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கிறோம் என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் உத்தியோகப்பூர்வமான அறிவிப்பின் ஒரு பிரதியை எனக்கும் தாருங்கள் அதனை மாவட்ட செயலாருக்கு வழங்க முடியும்.

சேதன பசளை உற்பத்தி என ஒதுக்கப்பட்ட 5 ஹேக்கர் நிலப்பரப்பு அரசியல் தரப்பினரின் இணக்கமானவர்களுக்கு வழங்க அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.இது குறித்து அவதானம் செலுத்துமாறு வலியுறுத்துகிறேன் என்றார்.

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு



# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி

இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25039 | ப + க | 1985**
மானிப்பாய் | இந்து
MBBS | Doctor
பூராடம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 01

**21792 | வே | 1993**
மானிப்பாய் | இந்து | Diploma
Medical Executive
திருவோணம் (மகரம்)
180 செ.மீ

**21957 | வே | 1991**
வேலணை | இந்து | BSc
Quantity Surveyor
திருவாதிரை (மிதுனம்)
170 செ.மீ | செவ்: 12

**21903 | வே | 1993**
மூளாய் | இந்து | BSc
IT Trainee
பூசம் (கடகம்)
170 செ.மீ

**24619 | வே | 1990**
யாழ்ப்பாணம் | கத்தோலிக்கம்
BD | Team Leader
சுவாதி (துலாம்)
170 செ.மீ

**21855 | வே | 1991**
உரும்பிராய் | இந்து | A/L
Associate Manager
பூரட்டாதி (கும்பம்)
175 செ.மீ

**25069 | வே | 1986**
பருத்தித்துறை | இந்து | BA
CIMA | Accountant
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 08

**21795 | வே+கோ | 1995**
கோப்பாய் | இந்து | A/L
Cashier | ஜேர்மனி
பூரம் (சிம்மம்)
167 செ.மீ | செவ்: 12

**24955 | சா | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Own Business
சித்திரை (துலாம்)
187 செ.மீ

**23851 | வே | 1976**
அச்சுவேலி | இந்து | A/L
Own Business
சுவாதி (துலாம்) | Canada
172 செ.மீ | சூ.செவ்: 04

**22549 | வே | 1988**
காரைநகர் | இந்து | B.Eng
Mechanical Engineer
கார்த்திகை (ரிஷபம்)
165 செ.மீ

**25048 | வே | 1991**
கோப்பாய் | இந்து | Master
Degree | Banker
சித்திரை (கன்னி)
177 செ.மீ | சூ.செவ்: 06

**22230 | வே | 1988**
கொக்குவில் | இந்து
Diploma | Receptionist
சுவாதி (துலாம்) | France
167 செ.மீ | செவ்: 02

**22224 | வே | 1988**
திருநெல்வேலி | இந்து | BSc
Exe.Mechanical Engineer
கேட்டை (விருச்சிகம்)
170 செ.மீ | Singapore

**21912 | வே | 1990**
கொக்குவில் | இந்து | MSc
Software Engineer
திருவோணம் (மகரம்) | ஜேர்மனி
180 செ.மீ | Divorced

**22179 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | HNDM
Reagional Manager
உத்தராடம் (தனுசு)
192 செ.மீ | செவ்: 04

**21996 | வே | 1990**
நெல்லியடி | கத்தோலிக்கம்
BSc | Engineer
187 செ.மீ

**22068 | வே | 1990**
சாவகச்சேரி | இந்து | BSc
Software Engineer
மகம் (சிம்மம்)
180 செ.மீ | செவ்: 04

**21891 | வே | 1992**
காரைநகர் | இந்து | BSc
Software Engineer
பூரட்டாதி (மீனம்) | USA
186 செ.மீ | செவ்: 07

**22146 | வே | 1993**
வேலணை | இந்து
BSc | Lecturer
பூரட்டாதி (கும்பம்)
165 செ.மீ | செவ்: 04

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**22264 | கோ | 1987**
கரவெட்டி | இந்து | Msc
Civil Engineer
பூரட்டாதி (கும்பம்)
160 செ.மீ

**21711 | வே | 1990**
நல்லூர் | இந்து
MBBS | Doctor
சதயம் (கும்பம்)
162 செ.மீ

**21645 | கோ | 1996**
புளியங்கூடல் | இந்து | A/L
Pharmacy Assistant
உத்தரம் (சிம்மம்)
165 செ.மீ

**22261 | வே | 1996**
ஈச்சமோட்டை | RC | Diploma
Accounts Assistant
சுவாதி (துலாம்)
157 செ.மீ | செவ்: 12

**22164 | வே | 1998**
காரைநகர் | இந்து | A/L
Student (BSc)
திருவாதிரை (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**22258 | கு | 1987**
முல்லைத்தீவு | இந்து | MBBS
MD | Doctor
மகம் (சிம்மம்)
164 செ.மீ

**22167 | சா | 1991**
பண்டத்தரிப்பு | இந்து | BA
Development Officer
பூரம் (சிம்மம்)
165 செ.மீ | சூ.செவ்: 09

**21882 | வே | 1992**
மீசாலை | இந்து | BD
Regulatory Affairs
Specialist | மகம் (சிம்மம்)
160 செ.மீ | France | செவ்: 02

**21831 | வே | 1995**
திருநெல்வேலி | இந்து
A/L | Junior Executive
கேட்டை (விருச்சிகம்)
146 செ.மீ | செவ்: 01

**22053 | தே | 1992**
மாத்தளை | இந்து
BD | PGD | Doctor
உத்தரம் (கன்னி)
157 செ.மீ | செவ்: 08

**21966 | கு | 1988**
காங்கேசன்துறை | இந்து
MBBS | Doctor
சுவாதி (துலாம்)
152 செ.மீ | செவ்: 02

**21675 | கு | 1992**
பருத்தித்துறை | கத்தோலிக்கம்
A/L | Teacher
மிருகசீரிடம் (மிதுனம்)
152 செ.மீ | செவ்: 08

**21738 | கோ | 1992**
கரவெட்டி | இந்து | PD
Lab Incharge | UK
உத்தராடம் (மகரம்)
172 செ.மீ | செவ்: 12

**25075 | வா.செ | 1992**
ஆனைக்கோட்டை | இந்து
Diploma | Teacher
மகம் (சிம்மம்)
174 செ.மீ

**22101 | கோ | 1995**
மூளாய் | இந்து | MBBS
Lecture & Consultant
ரேவதி (மீனம்)
165 செ.மீ | செவ்: 12

**22657 | வே | 1991**
கொக்குவில் | இந்து
Student (Music course)
ரேவதி (மீனம்)
162 செ.மீ

**25036 | அ | 1993**
கொழும்பு | இந்து | Diploma
Senior Business Analyst
அத்தம் (கன்னி)
162 செ.மீ

**25006 | இ.வே | 1993**
அளவெட்டி | இந்து
BSc | Nurse | UK
உத்தரட்டாதி (மீனம்)
158 செ.மீ

**22206 | கோ | 1993**
அச்சுவேலி | இந்து
A/L | Job Seeker
சதயம் (கும்பம்)
157 செ.மீ | செவ்: 01

**21930 | கோ | 1999**
அல்வை | இந்து
ACCA | Executive
மூலம் (தனுசு)
170 செ.மீ | செவ்: 12

## அருந்ததி பிரைவட் லிமிடட்

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# திருகோணமலையைக் குறிவைத்து சிங்களப் பேரினவாதம் தமது பணிகளை மிக வேகமாக ஆரம்பித்துள்ளது






(சுமன்)

திருகோணமலை மாவட்டத்தைக் குறி வைத்து சிங்களப் பேரினவாதம் தமது பணிகளை மிக வேகமாக ஆரம்பித்துள்ளது. தொல்லியல், வனபரிபாலனம் எனத் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் திட்டமிட்டு கூறு போடுகின்ற நிலைமையே நடந்து கொண்டிருக்கின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

திருகோணமலையில் இடம்பெற்ற இந்திய உயர்ஸ்தானிகருடனான நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை இந்தியா என்கின்ற நட்புறவோடு நீணட காலமாக இலங்கைக்குப் பல உதவிகளை வழங்கிய நாடாக அண்மையில் உள்ள நாடு என்ற அடிப்படையில் இந்தியா அமைந்துள்ளது.

இந்த நாட்டிலே தமிழர்களாகிய நாங்கள் எங்களுடைய கலை கலாசார அம்சங்களோடு வாழ வேண்டும் என்று நினைக்கின்றோம் ஆனால் திட்டமிட்டு எம்மினத்தின மீது சிங்களப் போனவாதம் திணிப்புகளைச் செய்து கொண்டிருக்கின்றது.

குறிப்பாக திருகோணமலை மாவட்டத்திலே திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் தொல்லியல் திணைக்களம் என்பவற்றின் மூலம் எமது புனிதத்தலத்தின் புனிதத்தைக் கெடுப்பதற்குரிய நடடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் இந்திய உயர்ஸ்தானிகரின் திருகோணமலை மாவட்ட வருகை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது.

அது மாத்திரமல்லாமல் திரியாய் என்று சொல்லப்படுகின்ற கிராமத்தை மையமாக வைத்து தொல்லியல் திணைக்களம், வனபரிபாலன இலாகா போன்ற திணைக்களங்களூடாகத் தமிழர்களின் பாரம்பரிய நிலங்கள் திட்டமிட்டு கூறு போடுகின்ற நிலைமையே நடந்து கொண்டிருக்கின்றது. மிக வேகமாக இந்த மாவட்டத்தைக் குறி வைத்து சிங்களப் பேரினவாதம் தமது பணிகளை ஆரம்பித்துள்ளது. இதனை இந்த நாட்டின் நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கின்ற செயற்பாடாகவே நாங்கள் கருதுகின்றோம். இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்து இந்த நாட்டிலே நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

நாட்டின் புதிய ஜனாதியாக ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தெரிவு செய்யப்பட்ட போதும் ராஜபக்ச காலத்தில் முன்னெடுக்கப்பட்ட அந்த சிங்கள அரச தீவிரவாத செயற்பாடு மிகவும் மோசமாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவர் பதவிக்கு வந்தபோது இந்த நாட்டில் சமாதானம், சமத்துவம், சகோதரத்துவத்தை நிலைநாட்ட வேண்டும் என்ற அடிப்படையில் பேசியிருந்தாலும் அதற்கு மாறான செயற்பாடுகளே எமது தமிழர் பிரதேசத்திலே நடந்து கொண்டிருக்கின்றன.

எனவே இந்த நாட்டில் சமாதானம் சமத்துவம், சகோதரத்துவம் நிலைநாட்டப்பட வேண்டுமானால் தமிழர் பிரதேசங்களிலே இடம்பெறுகின்ற நில ஆக்கிரமிப்புகள், மத ரீணீயான அடக்குமுறை என்பன நிறுத்தப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

## மட்டக்களப்பு - உன்னிச்சை குளத்தில் நீராடச் சென்றவர்களில் இருவர் சடலமாக மீட்பு!



(செங்கலடி நிருபர் சுபா)

மட்டக்களப்பு - உன்னிச்சை குளதில் நீராடச் சென்ற வவுனதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது மற்றும் 33 வயதுடைய இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு உன்னிச்சை குளதில் நண்பர்களுடன் நீராடச் சென்ற வவுனதீவு பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயது மற்றும் 33 வயதுடைய இருவர் ஞாயிற்றுக்கிழமை (03) மாலை நீரில் மூழ்கியிருந்த நிலையில் , 16 வயதுடைய சிறுவன் நேற்று சடலமாக மீடக்கப்பட்டார், மற்றுமொருவர் காணாமல் போயிருந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

வவுனதீவு காயமடு பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய விஷ்ணுகாந் விதுஷனன் சடலமாக நேற்று மாலை மீட்கப்பட்டதுடன் , இன்று காலை 33 வயதுடைய மனோகரன் கண்ணதாசன் மீட்கப்பட்டார்.

நண்பர்களுடன் உன்னிச்சை குளத்தில் நீராடச் சென்ற சம்பவதினமான நேற்று மாலை அந்த பகுதியில் உணவு சமைத்து சாப்பிட்டுவிட்டு குளத்தில் நீராடிபோதே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ இடதத்திற்கு சென்ற திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ் நசீர் சடலங்களை பார்வையிட்டு விசாரணைகளை நடத்தியிருந்தார்.

தற்போது உயிரிழந்த இருவரின் சடலமும் பிரேத பரிசோதனைக்காக செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## காரைதீவு கடற்கரையில் சடலமாக மீட்கப்பட்ட ஆசிரியை



(காரைதீவு சகா, பாறுக் ஷிஹான்)

சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை பிரதேசத்தில் மீட்கப்பட்டுள்ள சடலம் தொடர்பில் அடையாளம் காண பொலிஸார் பொதுமக்களின் ஒத்துழைப்பினை கோரியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவில் திங்கட்கிழமை(3) காலை 40 வயது மதிக்கத்தக்க பெண் குறித்த சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

சடலமாக மீட்கப்பட்டவர் காரைதீவைச்சேர்ந்த ஓர் ஆசிரியையின் சடலம் என்று இனங் காணப்பட்டது.

காரைதீவு 5 ஐச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாயாரான திருமதி தம்பியப்பா வனிதா( வயது 53) என்று உறவினரால் அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கல்முனையில் உள்ள பாடசாலை ஒன்றில் ஆசிரியராக கடமையாற்றி வருகிறார்.

இச்சடலம் தொடர்பாக காரை போலீசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.



## பத்தனை மவுண்ட்வேர்ணன் தோட்டத்தில் மண்மேடு விழுந்ததில் தாய் பலி





(தலவாக்கலை பி.கேதீஸ்)

மலையகத்தில் கடந்த இரண்டு நாட்களாக தொடர்ச்சியாக பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் சிக்கி மூன்று பிள்ளைகளின் தாயொருவர் பத்தனை மவுண்ட் வேர்ணன் மேற்பிரிவு தோட்டத்தில் நேற்று (3) காலை உயிரிழந்துள்ளதாக திம்புள்ள பத்தனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, நேற்று (3) அதிகாலை பெய்த கடும் மழையினால் தனி குடியிருப்புக்கு பின்னால் இருந்த பாரிய மண்மேடொன்று சரிந்து வீட்டின் கூரையின் மீது விழுந்துள்ளது. இதன்போது சமையலறையில் காலை தனது மகளுடன் சமையல் வேலை செய்துக்கொண்டிருந்த தாயின் மீது விழுந்ததில் அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார். இவ்வாறு உயிரிழந்தவர் பத்தனை மவுண்ட் வேர்ணன் மேற்பிரிவைச் சேர்ந்த ராமசாமி காளியம்மா (வயது 46) என்ற மூன்று பிள்ளைகளின் தாய் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இந்த அனர்த்தத்தில் குறித்த பெண்ணின் மகள் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.சடலம் தற்போது கொட்டகலை பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பின்னர் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் மரண பரிசோதனைகளின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.தற்போது மலையகத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாகவே இந்த அனர்த்தம் நிகழ்ந்ததாக தெரிவித்த திம்புள்ள பத்தனை பொலிஸார் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# மட்டக்களப்பு மக்களை எண்ணி நான் பெருமைகோள்கிறேன்






**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

காந்தியின் அகிம்சைப் போராட்டத்தினையும் தியாகத்தினையும் தொடர்ந்து மட்டக்களப்பு மக்கள் நினைவுகூருவதை எண்ணி தான் பெருமைகொள்வதாக இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

காந்தி ஜெயந்தி தினம் இன்றைய தினம் அனுஸ்டிக்கப்படவுள்ள நிலையில் அதன் சிறப்பு நிகழ்வு (01) திகதி மட்டக்களப்பு காந்திபூங்காவில் நடைபெற்றது.

அகிம்சையினை உலகுக்கு போதித்த மகாத்மா காந்தியின் பிறந்த தினம் காந்தி ஜெயந்தி தினமாக அனுஸ்டிக்கப்படுகின்றது.

சனிக்கிழமை காந்தி ஜெயந்தி தின நிகழ்வுகள் மட்டக்களப்பு காந்தி பூங்காவில் உள்ள மகாத்மா காந்தி சிலையருகில் நடைபெற்றது.

காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு அதன் தலைவர் கலாநிதி அ.செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே கலந்துசிறப்பித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன், பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது காந்தியின் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டதுடன் ரகுபதி ராக ராஜாராம் பாடலும் இசைக்கப்பட்டது.

# கல்விதான் எமது உரிமைகளை பெற்று தருகிறது!

## அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உரை




**( காரைதீவு சகா)**

உலகில் எதற்கும் இல்லாத சக்தி கல்விக்கு இருக்கின்றது. இந்த கல்விதான் எமது உரிமைகளை பெற்றுத் தருகின்றது .அது ஒரு சமூக மாற்றத்திற்கான கருவியும் கூட .இங்கு கல்வியில் சாதனை படைத்தோரைக் கௌரவிப்பது பாராட்டுக்குரியது.

இவ்வாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் தெரிவித்தார்.

சிலோன் பிரிட்டிஷ் காலேஜ் புதிய வனத்தாப்பட்டியில் இம்முறை பல்கலைக்கழகத்திற்கும் கல்வியில் கல்லூரிக்கும் தெரிவான எட்டு மாணவர்களை பாராட்டுகின்ற நிகழ்வில் உரையாற்றுகையில் அவரா இவ்வாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வு கல்லூரியின் முகாமைத்துவ பணிப்பாளர் வெள்ளையன் வினோகாந்த் தலைமையில் புதிய வளத்தாப்பிட்டி நாவலர் மண்டபத்தில் நேற்று மாலை நடைபெற்றது.

முன்னதாக அதிதிகள் கோலாட்டம் சகிதம் ஆரத்தி எடுத்து வரவேற்கப்பட்டார்கள்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்.

1994ஆம் ஆண்டு மீள் குடியேற்றப்பட்ட இக் கிராமம் இன்று பலதுறைகளிலும் முன்னேறி வருகின்றது. குறிப்பாக கல்வித்துறையில் முன்னேறி வருவது சந்தோஷமாக இருக்கின்றது .

இங்கு அனுபவங்களை பரிமாறிய மாணவர்களும் பெற்றோர்களும் எவ்வளவு கஷ்டத்தின் மத்தியிலே அவர்கள் இந்த கல்வியை தொடர்ந்தார்கள் என்பதனை துல்லியமாக எடுத்துக் கூறினார்கள். உண்மையிலேயே இதுதான் வெற்றி .இது தான் சாதனை. உங்களை மனமார வாழ்த்துகின்றோம். என்றார்.

மேலும் விழாவில் சிறப்பு அதிதிகளாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா, பாடசாலை அதிபர் கே. கணேஷ், சம்மாந்துறை பிரதேசசபையின் முன்னாள் உபதவிசாளர் வெள்ளி. ஜெயச்சந்திரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள். அதிதிளுக்கும் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டன. அதேபோன்று மாணவர்களுக்கும் சான்றிதழ் நினைவு சின்னங்கள் போன்றன வழங்கப்பட்டன.

ஒரு குடும்பத்தில் நான்கு பிள்ளைகளையும் படிப்பித்து தொழிலாக்கிய சிறிதரன் தம்பதியர் 'சிறந்த தம்பதியர் ' என முன்மாதிரியாக அங்கு பாராட்டப்பட்டார்கள்.

மாணவர்கள் பெற்றோர்களது அனுபவ பகிர்வுகள் மேடையிலே பேசப்பட்டது விசேட அம்சமாக இருந்தது.

நிகழ்ச்சிகளை செல்வமணி பிரபாகரன் வினோகாந்த் ஆகியோர் தொகுத்து வழங்கினார்கள்.

# பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் குச்சவெளிக்கு விஜயம்



**(எப்.முபாரக்)**

குச்சவெளி பிரதேச சபைக்கு விஜயம் செய்த பாகிஸ்தான் நாட்டின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் எச் இ.உமர் பாருக் புக்ரி H.E.Major General (R) Umar Farooq Burki.HI (M) அவர்களுக்கு குச்சவெளி பிரதேச சபையின் தவிசாளர் ஏ.முபாறக் அவர்களினால் விசேட வரவேற்பு ஞாயிற்றுக்கிழமை (2) இடம்பெற்றது.

இதன்போது இருவருக்குமிடையில் மிகமுக்கிய கலந்துரையாடலும் இடம் பெற்றது.

இக் கலந்துரையாடலில் குச்சவெளி பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களின் கல்வி, சுகாதாரம், கலை மற்றும் கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்திகள் சம்மந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் குச்சவெளி பிரதேசமானது கடந்த சுனாமி அனர்த்தம் மற்றும் இௌிஙஜஈ 19 தாக்கங்களினால் பெரிதும் பாதிப்பட்டிருந்தது இதனால் இப் பகுதியிலுள்ள மக்களின் வாழ்வாதாரம் மிகவும் பாதிப்படைந்துள்ளது. அத்துடன் இப்பிரதேசங்களில் குடிநீர் பிரச்சினை பாரிய பிரச்சினையாக காணப்படுகிறது. அத்துடன் இங்குள்ள இளைஞர், யுவதிகளின் தொழில் பிரச்சினை, சுத்தமான குடிநீர் வசதி இன்மை உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக உயர்ஸ்தானிகருக்கு தவிசாளரினால் தெளிவுபடுத்தப்பட்டது.

இவற்றை செவிமடுத்த உயர்ஸ்தானிகர் இப்பிரதேசத்தை தனது மனதில் கொண்டு தேவையான அனைத்து அபிவிருத்திச் சார்ந்த பிரச்சனைகளும் தீர்வினை பெற்று தருவதாகவும் உறுதியளித்தார்.

அத்துடன் தவிசாளர் இப்பிரதேசத்தில் அதிகளவான முதலீடுகளை மேற்கொள்ளவும், தொழில்பேட்டைகள் அமைத்து இப்பிரதேச இளைஞர் யுவதிகளின் தொழில் பிரச்சனைகளுக்கு தீர்வினை பெற்றுத் தருமாறு கேட்டுக்கொண்டார்.

அத்துடன் குச்சவெளி ஜாயாநகர் பிரதேசத்தில் பாகிஸ்தான் நாட்டின் உதவியில் நிர்மாணிக்கப்பட்ட பொதுக் கிணறும் திறந்துவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



# ஊடகவியலாளர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கும் நிகழ்வு




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் களப்பணியாற்றி வரும் தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு ஊக்குவிப்பு நிதி வழங்கும் இரண்டாம் கட்ட நிகழ்வு நேற்று (30) ஓட்டமாவடி பிரதேச சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளரும் ஊடகவியலாளருமான எம்.ரீ.எம்.பாரிஸ், தியாகி அறக்கொடை நிதியத்தின் இஸ்தாபகத் தலைவரும் சமூகச் செயற்பாட்டாளருமான வாமதேவன் தியாகேந்திரனிடம் முன்வைத்த வேண்டுகோளுக்கமைய இவ்வூக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது.

கல்குடா மீடியா போரத்தின் பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன், மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜீ.சுகுணன், ஓட்டமாவடி பிரதேசசபைத்தவிசாளர் ஏ.எம்.நௌபர், கிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் என்.தனஞ்சயன்,

வாழைச்சேனை பொலிஸ் நிலையை பொறுப்பதிகாரி லசந்த பண்டார, கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி, கோறளைப்பற்று மத்தி, வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலகங்களின் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எஸ்.ஏ.எம்.நளீம், ஏ.எல்.பீர்முஹம்மத், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.என்.எம்.சாஜஹான்,

ஓட்டமாவடி பிரதேச சபைச்செயலாளர் எஸ்.எம் சிஹாப்தீன், ஓட்டமாவடி வர்த்தக சங்கத் தலைவரும் சிவில் சமூகச் செயற்பாட்டாளருமான எம்.ஏ.சீ.நியாஸ் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நிகழ்வின் போது அதிதிகள் மற்றும் சமூக நல்லிணக்கச் செயற்பாடுகளில் ஈடுபட்டு வரும்

சமூகச்செயற்பாட்டாளர்களும் நினைவுப்பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

ஊடகவியலாளர்களுக்கான நலன்புரி விசேட வேலைத் திட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்களுக்கு இவ்வூக்குவிப்பு நிதி வழங்கும் இரண்டாம் கட்ட வேலைத்திட்டத்தின் கீழ் 15 பேருக்கு

நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளதுடன், இது வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 45 தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் வீதம் கல்குடா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் தியாகி அறக்கொடை நிதியத்தினால் நிதி வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கிழக்கு மாகாணத்தில் பெண்கள் சிறுவர்கள் தொடர்பான விடங்களைக் கையாளும் விதத்தை அறிந்து கொள்ளும் கள விஜயம்

**(ரக்ஸனா)**

கிழக்கு மாகாணத்தில் பெண்கள் சிறுவர்கள் தொடர்பான வியடங்களைக் கையாளும் விதத்தை அறிந்து கொள்ளும் கள விஜயம் இடம்பெற்று வருவதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் ரீ. திலீப்குமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட மட்ட பெண்கள் வலையமைப்பு செயற்பாட்டாளர்கள், சிறுவர் பெண் பிள்ளைகள் சார்ந்த அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள், பெண்கள், மாவட்ட, பிரதேச செயலக அலுவலர்கள், துறைசார்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்ட கள வியத்தின்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் ஏற்பாட்டில் அதன் நலிவுற்ற பெண்கள் சிறுவர்கள் தொடர்பான சமூக பொருளாதார அபிவிருத்தித் திட்டம் எனும் நிகழ்ச்சி அமுலாக்கத் திட்டத்தின் கீழ் இந்த கள விஜயம் இடம்பெற்று வருகின்றது.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனம் இந்த திட்ட அமுலாக்கத்திற்கு நிதி அனுசரணையுடன் வழங்கி வருகின்றது.



திருகோணமலை மாவட்ட அரச அதிகாரிகள் செயற்பாட்டாளர்களின் பிரசன்னத்துடன் மட்டக்களப்பு மாவட்ட செயலக, பிரதேச செயலக அரச அதிகாரிகள், பெண்கள் செயலணியினர், செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் இந்த கள விஜயத்தில் பங்கு பற்றியுள்ளனர்.

குழுவினர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஒரு பிரிவாக இயங்கும் சிறுவர் நட்பு நிலையம், மட்டக்களப்பு நகர பிரதேச செயலகம் ஆகியவற்றுக்கு விஜயம் செய்து அங்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைக் கண்டறிந்து கொண்டனர்.

இது பற்றி மேலும் கருத்துத் தெரிவித்த இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் திலீப்குமார், மிகவும் காத்திரமான இலக்காக பெண்களையும் சிறுவர்களையும் கண்ணியப்படுத்திக் கொண்டு அவர்களை விசேட இலக்குக் குழுவாகக் கருதி அவர்களது பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கான பல்வேறு உபாயங்களைக் கையாண்டு வருகின்றோம். இது கிழக்கு மாகாணத்தில் உரிய திணைக்களங்களோடு தொடர்புபட்டு இணைப்பாக்கம் செய்து அமுல்படுத்தப்பட்டு வருகின்றது.

அந்த அடிப்படையிலேயே பெண்களுக்கென நிலைபேறான ஒரு அபிவிருத்தியை நோக்கி, பெண்கள் சுதந்திரமாகவும் தனித்துவமாகவும் தங்களது சமூக, பொருளாதார, உரிமை சார்ந்த விடயங்களை மேம்படுத்திக் கொண்டு, பெண்களுக்கும் பெண் பிள்ளைகளுக்கும் சிறுவர்களுக்கும் பாதுகாப்பான குடும்ப சமூகச் சூழலை உருவாக்குவதே இதன் இலக்காகும். இணைந்து செயற்படுகின்றபோது பெண்கள், பெண் பிள்ளைகள், சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளை இலகுவாகத் தீர்க்கலாம் என்பது அனுபவ ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அதனை அடிப்படையாகக் கொண்டே இந்த கள விஜயங்கள் இடம்பெற்று வருவதாக திலீப்குமார் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் மாவட்டச் செயலாளர் மேலதிக மாவட்ட செயலாளர் சுதர்ஷினி ஸ்ரீகாந், மாவட்ட உதவி அரசாங்க அதிபர் ஏ.நவேஸ்வரன், கே.கருணாகரன், திருகோணமலை மாவட்ட பெண்கள் அபிவிருத்தி அலுவலர் சுவர்ணா தீபானி உள்ளிட்ட பல அதிகாரிகள் கலந்து கொண்டு பெண்கள் மேம்பாடு சம்பந்தமான கருத்துக்களைத் தெரிவித்தனர்.

# கடற்கரையில் சர்வதேச சிறுவர் தின விளையாட்டு விழா!







**( காரைதீவு சகா)**

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு காரைதீவு விபுலானந்த மொண்டிசோரி முன்பள்ளி பாடசாலை நடாத்திய வருடாந்த சிறுவர் தின கடற்கரை விளையாட்டு விழா

(1) மாலை கோலாகலமாக இடம் பெற்றது.

பாடசாலையின் ஆசிரியர்களான ஜெயநிலந்தினி ரம்யா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ,பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச சபை தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதியாக பாடசாலை பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக காரைதீவு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சார்பில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் பி.அமரானந்த கலந்து கொண்டார்.

கடற்கரையிலே சிறுவர்களுக்கான விளையாட்டு கண்கவர் நிகழ்ச்சிகள் சிறப்பாக இடம் பெற்றன.

அதனை விளையாட்டு உத்தியோகத்தர் வி.பாஸ்கரன் நெறிப்படுத்தினார்.

கடற்கரையிலே சிறுவர்கள் பெற்றோர்களும் இணைந்து விளையாட்டு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.

சிறுவர்களின் வினோத உடைப்போட்டி சிறப்பாக நடைபெற்றது.

பங்கு கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் பரிசளிப்பு நிகழ்வு இடம் பெற்றது .

பெற்றோர் சார்பில் ஆனந்தன் அமிர்தானந்தன் நன்றி உரை நிகழ்த்த, நிகழ்ச்சிகளுக்கான ஒலி நெறிப்படுத்தலை பெற்றோர் சார்பில் இராஜநாயகம் ரமேஷ் வழங்கி இருந்தார்.

# ஒவ்வோரு பிள்ளைகளின் உரிமைகளை மறுக்காது அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் செவிமடுக்க வேண்டும் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜே.ஒஸ்மன் குலாஸ்

**(வாஸ் கூஞ்ஞ)**

எதிர்காலத்தை நாசமாக்குவதற்கும் தங்கள் வியாபாரத்தை பெருக்கிக் கொள்வதற்கும் சிறுவர்களை இன்று குறிவைக்கப்பட்டு போதைப் பொருட்கள் சிறுவர்கள் மத்தியில் விதைக்கப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வீட்டிலும் வெளியிலும் பிள்ளைகளின் உரிமைகளை நாம் மறுக்காது அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் செவிமடுக்க வேண்டும். மன்னார் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜே.ஒஸ்மன் குலாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

பேசாலையில் சிறுவர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்வில் மன்னார் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜே.ஒஸ்மன் குலாஸ் கலந்து கொண்டு இங்கு மேலும் தெரிவிக்கையில்

சிறுவர்களுடைய இன்றைய சிறப்பு அம்சம் என்னவென்றால் எங்கள் சிறுவர்கள் தாங்கள் சந்திக்கின்ற பிரச்சனைகளையும் நாளாந்தம் அவர்கள் எதிர்கொள்ளுகின்ற சவால்களையும் தங்கள் குரல்களினாலேயே தங்கள் பெற்றோர்களுக்கு பெரியோர்களுக்கு தெரியப்படுத்தினர்.

எமது அரசும் பல்வேறுபட்ட வழிமுறைகளை கையாண்டு சிறுவர்களுக்கான பாதுகாப்புக்கான வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இந்த வகையில் இன்யை காலக்கட்டத்தில் இந்த சின்னஞ் சிறுவர்களின்



எதிர்காலத்தின் நலன்களை தகர்த்தெறிவதற்கு போதைப் பொருள் குறிப்பாக எமது பகுதிகளிலும் சிறுவர்களை இலக்கு வைத்து அவர்கள் மத்தியில் விதைக்கப்பட்டு வருகின்றது.

பேசாலை பகுதியில் இந்த சிறுவர்களுக்கு அயல் கிராமத்திலிருந்து விநியோகிக்கப்படும் போதை பொருட்களால் பாதிப்பு அடைந்து வருவதை நாங்கள் தற்பொழுது இனம் கண்டுள்ளோம்.

இதனால்தான் இன்று எமது சிறுவர்களின் குரலாக எங்களை போதையிலிருந்து விடுவியுங்கள் எங்கள் சிறகுளை உடைக்காதீர்கள் நாங்கள் சிறகடித்து பறக்க துடிக்கும் வண்ணாத்தி பூச்சிகள்

ஆகவே எங்களை போதைகளாலேயோ அல்லது பல்வேறுபட்ட பிரச்சனைகளாலேயோ எங்கள் எதிர்கால வாழ்வை நாசமாக்காதீர்கள்.

நாங்கள் இந்த சிறு வயதில் மகிழ்ச்சிகரமாக வாழ எங்களுக்கு வழி சமைத்து தாருங்கள் என இந்த சின்னஞ் சிறுசுகள் பெரியோர்களிடம் பெற்றோரிடம் வேண்டி நிற்கின்றனர்.

இன்று இந்த பிள்ளைகள் தங்கள் குரலை பதிவு செய்தபோது எத்தனை பெரியோர்கள் செவிமடுத்தீர்களோ தெரியாது இருந்தும் பிள்ளைகளின் உரிமைகளை நாம் மறுக்காது அவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு நாம் செவிமடுக்க வேண்டும்.

இல்லையேல் பிள்ளைகள் வழி தவறி போகும் சூழ்நிலைகள் உருவாகி வருகின்றன. இந்த சிறுவர் தினத்திலே பிள்ளைகள் ஒரு சில மணி நேரம் எவ்வளவு மகிழ்ச்சியுடன் இருக்கின்றார்கள் என்பதை நாம் பார்க்கும்போது எமக்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கின்றது என்பதை நாம் உணர்கின்றோம் அல்லவா.

ஆகவே ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகள் இவ்வாறான மகிழ்ச்சியில் திளைப்டர்களானால் எமது குடும்பங்கள் சமூகம் இந்த நாடு வளப்படும் எதிர்காலம் சீரும் சிறப்பாகவும் அமையும் என தெரிவித்து நிற்கின்றேன் என இவ்வாறு மன்னார் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஜே.ஒஸ்மன் குலாஸ் இவ்வாறு தெரிவித்தார்.

# சர்வதேச சிறுவர் தின வெற்றிக் கேடயம் ௨0௨௨

சகல பிள்ளைகளுக்கும் சிறந்ததொரு எதிர்காலம் எனும் தொணிப்பொருளில் சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை இல்லாதொழிற்பதற்கான இளைஞர் முன்னணி ( AYEVAC) நாடளாவிய ரீதியில் 25 மாவட்டங்களில் ChildFund நிறுவனத்தோடு இனைந்து ஏற்பாடு செய்துள்ள சிறுவர் தின நிகழ்வுகளில் அம்பாறை மாவட்ட நிகழ்வுகள் தேசிய இனைப்பாளர் மீ.ஒ.செரோன் அனாஸ் அவர்களின் வழிகாட்டலில் 2022.10.02 திகதி சம்மாந்துறை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் மிக விமர்சையாக நடைபெற்றது.

இந் நிகழ்வில் Spartans Sports Club மற்றும் Spartans Sports Academy சிறுவர்களுக்கு உதைபந்தாட்ட போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வில் அதிதிகளாக வைத்தியர் MNM தில்ஷான், GAfso அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் A.J.காமில் , Spartans Sports Club தலைவர் MNMH. அர்கம் உள்ளிட்ட அணியினர் கிராம சேவகர்களான ABM றமீஸ் , M உதய ராஜன், ஓய்வு பெற்ற தபால் அலுவலகர் ALM பஷீர் AYEVAC மாவட்ட பிரதிநிதிகளான AM. ஹிஷாம், CMM. சப்னாஸ்,M.ஜப்ரான், M.சர்பான் MTAH அன்பாஸ் என மற்றும் பலர் கலந்து சிறப்பித்தனர்.

இந் நிகழ்வில் சிறுவர்களின் எதிர்காலம் மற்றும் உரிமைகள் தொடர்பில் எச்னூண்ணி அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அ.ஒ காமில் உரையாற்றியதை தொடர்ந்து வைத்தியர் MNM தில்ஷான் விளையாட்டின் மூலம் ஆரோக்கியமான சிறுவர் எதிர்காலத்தை கட்டியெழுப்புவதன் அவசியத்தை







வலியுறுத்தி உரையாற்றினார். நிகழ்வின் நன்றியுரையை Spartans Sports Club இன் தலைவரும் நிறுவுனருமான MNMH அர்கம் அவர்கள் சிறுவர் தின வாழ்த்து செய்தியுடன் அதிதிகளால் சிறுவர்களுக்கு வெற்றிக் கேடயம் மற்றும் கிண்ணங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# நன்னம்பிக்கை கல்வி நிதியம் வருடந்தோறும் வழங்கும் நிதிவுதவி







**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

நன்னம்பிக்கை கல்வி நிதியம் வருடந்தோறும் இலங்கையில் அரச பல்கலைக்கழகங்களில் பயிலும் மலையக மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கிவருகின்றது. அதற்கிணங்க நிதியம் இம்முறையும் 67 மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கியது இந்த நிகழ்வு நேற்று முன் தினம் (2) அட்டன் வெப்ஸ்டர் சர்வதேச பாடசாலையில் நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் நன்னம்பிக்கை கல்வி நிதியத்தின் தலைவர் எஸ்.சுப்பையா, செயலாளர் பேராசிரியர் தை.தனராஜ் ,பொருளாளர் சட்டத்தரணி எஸ்.தாயுமானவன் உபதலைவர் முன்னாள் அமைச்சின் செயலாளர் எம்.வாமதேவன், செயற்குழு உறுப்பினர்களான கலாநிதி எஸ்.கருணாகரன், பி.ராமதாஸ், சட்டத்தரணி கைலாசமூர்த்தி ஆகியோர் கலந்துக்கொண்டனர். நுவரெலியா மாவட்டத்தை சேர்ந்த முதலாம் ஆண்டு மாணவர்கள் 30 பேருக்கும் இரத்தினபுரி மாவட்டத்தை சேர்ந்த 16 மாணவர்களுக்கும் கண்டி மாவட்டத்தை சேர்ந்த நான்கு மாணவர்களுக்கும் பதுளை மாவட்டத்தை சேர்ந்த 5 மாணவர்களுக்கும் கேகாலை மாவட்டத்தை சேர்ந்த ஒரு மாணவரும் இந்நிதி உதவியினை பெற்றுக்கொண்டனர்.



# பாட்டாளிபுரம் அருள் மிகு பத்திரகாளி அம்பாள் வரலாறும் சிறப்பும்..!

**(அ . அச்சுதன்)**

நித்திலம் கொழிக்கும் கோணமாமலையின் கிழக்கின் முது பெரும் ஊராம் கொட்டியாபுரம் என அழைக்கப்பட்ட மூதூரின் பாட்டாளிபுரத்திலே அகம் பூஞ்சோலை ஸ்ரீ அருள்மிகு பத்திர காளியம்மாள் நிலை பெற்று நிறையருள் தருகிறாள் இன்றும்..என இளைஞர் அபிவிருத்தி அகம் அமைப்பின் முன்னாள் இணைப்பாளர் செ. கலாரதன் தெரிவித்தார்.

இங்கே அம்பாள் வந்த கதை ஒரு வழிப்படுத்தலில் வந்த வரலாறு ஆகும்.

1999 களிலிருந்து வறுமை மற்றும் கல்வியினால் பெரும் பின்னடவை சந்தித்த மூதூர் கிழக்கின் பாட்டாளிபுரம் ,நல்லூர் ,வீரமாநகர் ,சந்தனவெட்டை ,இளக்கந்தை ,சந்தோசபுரம் உள்ளிட்ட கிராமங்களில் இளைஞர் அபிவிருத்தி அகம் அவர்களின் நிலையான அபிவிருத்திக்கான பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொண்டோம். அத்துடன் வெவ்வேறு தொண்டு நிறு



வனங்களும் இணைந்து இம் மக்களின் மேம்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தன. குறிப்பாக எமது அமைப்பான அகம் 2001 ம் ஆண்டு இளைஞர் வள மைய கட்டிடம் ஒன்றை அமைத்து இளைஞர் வலுவூட்டல் செயற்பாடுகளை மேற்கொண்டதுடன் தொழிற்பயிற்சிகளையும் நடாத்துனோம். மேலும் பூஞ்சோலை மக்கள் அமைப்பு போன்றவற்றை ஏற்படுத்தி சேமிப்பு மற்றும் கல்வி வாழ்வாதார வேலைத் திட்டங்களை மேற்கொண்டு சமூக ,பொருளாதார நிலைப்படுத்தலை உறுதிபடுத்தினோம். ஆயினும் 2006 மற்றும் 2009 ல் ஏற்பட்ட யுத்தத்தின் சத்தத்தில் கட்டுமானங்கள் அனைத்தும் வீழ்ந்தன. 2009ற்கு பிற்பாடு யுத்த நிறைவு இந்த சமூகத்திலே ஆரோக்கியமான பல விடயங்கள் நடந்தேறிய அதே வேளை இளைஞர் மத்தியிலே ஆபத்தான சமூக சீர்கேடுகளையும் உள்வாங்கி கொண்டது.சமூகம் கல்வி மற்றும் நல் அறநெறிகளிலிருந்து பின் நகர்ந்து சென்றது. ஆகவே கல்வி கலாச்சார மட்டத்தில் பின் தங்கிய இச் சமூகத்தினை மீள வழிப்படுத்த எளிமையான வழி தேடப்பட்ட போதினிலே ''வழிபாடு'' என்பது வழிப்படுத்த ஏதுவான கருவியாக எம் கண் முன் வந்தது. '' அன்பின் அளவற்ற பரிமாணம் ஆன்மீகம்'' பண்பின் பெரும் பிரவாகம் பக்தி '' எனவே இவ் ஆன்மீக பக்தி நெறி ஊடாகவே அறம் மற்றும் அறிவுசார் விடயங்களை இச்சமூக மட்டத்தில் ஊட்ட முடியுமென முழுமையாக நம்பினோம்.காலங்காலமாக தெய்வ விடயங்களுக்கு மதிப்பளித்த இச் சமூகத்தின் அடிப்படை பண்பை மேலோங்க அதன் வழியே அவர்களை வழிப்படுத்த எண்ணம் பிறந்தது.

இதன்படி அவர்களின் குல தெய்வமான காளி அம்பாளை 2010.03.22 அகத்தின் இளைஞர் வள மைய கூட்டத்தின் அருகிலேயே சிறிய அளவில் பிரதிஷ்டை செய்து இச்சமூக மக்கள் வழிபாடு செய் ஆவண செய்தோம். அம்பாளுக்கு தினந்தோறும் விளக்கு வைத்தல் வழிபாடு செய்தல் மற்றும் வருடாந்தம் அம்பாள் பிரதிஷ்டை செய்த நாளில் பொங்கல் மடை வைத்தும் வந்தோம். இதனூடாக இச்சமூக மக்களை ஒன்றிணைத்தலை தொடக்கமாக கொண்டு தொடர்ந்து பயணித்த எமது செயற்பாடுகள் ஆரம்பத்தில் கடினமான போதும் உண்மையான ஆன்மீக வழிப்பட்ட இச் செயல்பாடுகள் அம்பாள் கருணையுடன் சரியான பாதை வழி பயணித்தது. முன்னேற்றம் கண்டது. யுத்தத்தில் சேதமான இளைஞர் வள மைய கட்டிடத்தை மீள சிறியளவில் திருத்தி, புதுப்பித்து ஆசிரியர் உதவியுடன் அறநெறி வகுப்புகளை மேற்கொண்டு வருகிறோம்.

மாணவர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. கல்வி உதவிகள் மற்றும் இளைஞர் வலுவூட்டல், விழிப்புணர்வு நடவடிக்கைகள் செயல்படுத்தப் படுகின்றன. வாழ்வாதார நடவடிக்கைகள் என்பவற்றை செயற்படுத்தி வருகிறோம்.மட்டுமன்றி மாதாந்த பௌர்ணமி பூஜை யும் அன்னதான நிகழ்



வும் ஒரு சிறப்பு நிகழ்வாக இங்கு நடைபெற்று வருகிறது. இத்தருணத்திலே தான் சிறியளவிலான அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்ட இடத்தை விஸ்தரித்து முறையான கும்பாபிஷேகம் செய்யவும் இம் மக்கள் விரும்பினர். அம்பாள் அருளும் இவ் ஏழ்மையான மக்கள் சமூகத்தில் இன்று ஈடேறியது.. அந்தப்பணிகள் யாவும் நடந்தேறி

எதிர்வரும் 08.10.2022 அம்பாளுக்கு எண்ணை சாத்தும் நிகழ்வுடன், 09.10.222 மகா கும்பாபிஷேகமும் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

தொடர்து இம்மக்களின் மேம்பட்ட வாழ்க்கைக்கு துணை நின்று அருள் பாலிக்க அம்பாள் நிலை நிற்கப் போகிறாள் இங்கு!

**"அன்னையே அபிராமி**
**உன்னையே தொழுகிறோம்!**
**உத்தமியே !...**
**சத்திய வழி இதை**
**சாத்தியமாக்குவாய் வாழி !"**
**எனும் பாடல் சிறப்பு.**





# கிழக்குப் பல்கலைக்கழத்தின் 26 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா
















**(அமிர்தகழியான்,செங்கலடி நிருபர்)**

கிழக்குப் பல்கலைக்கழத்தின் 26 ஆவது பொதுப்பட்டமளிப்பு விழா மட்டக்களப்பு வந்தாறு மூலை வளாகத்தின் நல்லையா மண்டபத்தில் 01.10.2022 நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழா ஆரம்ப நிகழ்வில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் வாக்லே கலந்துகொண்டதுடன் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் முனைவர் ந. பஞ்சநதமும் பங்கேற்றார்.

கிழக்குப்பல்கலைக்கழகம் அதன் 42 ஆவது ஆண்டினைப் பூர்த்தி செய்யும் வேளையில் இப்பட்டமளிப்பு விழா நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இம்முறை வெளிவாரி மற்றும் உள்வாரியாக கல்வி நெறிகளைப்பூர்த்தி செய்துள்ள 2506 பேர் பட்டம் பெறுகின்றனர்.

கலாநிதி, முதுதத்துவமாணி, விவசாய, விஞ்ஞான முதுமாணி, முதுகலைமாணி, முதுகல்விமாணி, வணிக நிருவாகத்தில் முதுமாணி, அபிவிருத்திப் பொருளியல் முதுமாணி, முகாமைத்துவ பட்டப் படிப்பின் டிப்ளோமா மற்று இளமாணி உட்பட 1247 பேருக்கு முதல் நாள் பட்டம் வழங்கப்பட்டது.

இரண்டாம் நாள் விழாவின்போது 1259 பேர் பட்டம் பெற்றனர்.

கிழக்குப்பல்கலைக்கழக வரலாற்றில் முதல்தடவையாக தொழில்நுட்பபீட மாணவர்களுக்கான விவசாய தொழில் நுட்பம் மற்றும் முயற்சியான்மையில் உயிர் முறைமைகள் தொழில் நுட்ப இளமாணி பட்டம் வழங்கப்பட்டது.

# முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்துக்கான திருத்தம்

## அரசியற் பின்னணியில் ஒரு பார்வை

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தினைத் திருத்துவது தொடர்பில் ஆராய்கின்ற பொழுது இதன் பின்னணியாக இருக்கின்ற தேசிய, சர்வ தேச அரசியல் காரணிகள் பற்றியும் அறிந்திருத்தல் அவசியம். அப்போதுதான் நாம் சாதாரண விடயம் எனக்கருதி அலட்சியமாக விட்டுக்கொடுப்புச் செய்கின்ற விடயங்கள் எமக்கு ஏற்படுத்தப்போகின்ற பாதிப்புகள்பற்றிப் புரிந்துகொள்ள முடியும்.

உஸ்மானிய கிலாபத்தின் வீழ்ச்சிக்குப்பின் உலகில் எங்கெல்லாம் இஸ்லாமிய சட்டங்கள் பின்பற்றப்படுகின்றதோ அவை அனைத்தையும் இல்லாமலாக்குவதற்கான பலவகைப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் உலகளாவிய ரீதியில் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. முஸ்லிம்களை அடிப்படைவாதிகளாகவும், தீவிரவாதிகளாகவும் மேற்கோள்காட்டி இஸ்லாத்தின் பெயரால் எம்மில் சிலருக்குள் தீவிரவாதக் கருத்துக்களைப் புகுத்தி, பின்னர் அவர்களைப்பயன்படுத்தி முழு முஸ்லிம் சமூகத்தையும் அந்தத் தலைப்பில் அடையாளப்படுத்தி அவர்கள் மீது ஆக்கிரமிப்புச் செய்வதன் மூலம் இஸ்லாமிய சட்டங்கள் ஆட்சி செலுத்திய ராச்சியங்கள் வீழ்த்தப்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

மேலும் தனிமனித சுதந்திரம், பெண்ணுரிமை, பெண்நிலைவாதம், சிறுவர் உரிமை போன்ற சுலோகங்களைப் பயன்படுத்திப் பல நாடுகளில் அந்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவி, அனுசரணைகளைப் பகரமாகக் கொடுத்தும் அழுத்தங்களைப் பிரயோகித்தும், பேரம்பேசியும் இஸ்லாமிய சட்டங்களைக் கையுதிர்க்கச் செய்துள்ளன. இந்த நிகழ்ச்சிநிரலின் தொடர்ச்சியாகவே இலங்கையிலும் முஸ்லிம்களின் கையில் எஞ்சியுள்ள முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திலும் திருத்தங்கள் செய்வதற்கான கோரிக்கைகள் அமைந்துள்ளன. இதற்க்குச் சிறந்த உதாரணமாக, திருமணம் ஒன்றின்போது வலியின் அவசியத்தை இல்லாமல் ஆக்குவதற்காக அவர்கள் முன்வைக்கின்ற வாதமானது, முஸ்லிம் ஆண்கள் அவர்களின் பெண்களுக்கு உரிமைகளை வழங்காமல் சிறுவர்கள் போன்று நடத்துகின்றார்கள் என்பதாகும். எனவே மிகவும் நுட்பமான முறையில் இஸ்லாமிய சட்டங்களை இல்லாமல் ஆக்குவதற்கான முயற்சி திட்டமிட்டு நடைபெறுகின்றது. இதில் துரதிஷ்டம் என்னவெனில் தெரிந்தோ தெரியாமலோ எம்மிற் பலர் இந்நிகழ்ச்சிநிரலுக்கு ஏவல் புரிகின்றோம் என்பதுதான்.

இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் இந்நாட்டில் தேசப்பற்று மிக்கவர்களாக ஆயிரம் வருடங்களுக்கு மேலான வரலாற்றை நிறுவியுள்ளனர். இந்நாடு பல இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொண்ட போதெல் லாம் நாட்டின் ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்பட்டு அவற்றை எதிர்கொள்ள பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளனர். ஆனால் துரதிஷ்டவசமாக அரசியல் காரணங்களுக்காக அண்மைக்காலமாக எமது சமூகம் இந்நாட்டில் ஓரங்கட்டப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் இருந்து எமது சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதத்திற்கான தருணம் இது. அதைச் சரிவரைச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் சமூகமாக நாம் முன்னெடுக்க வேண்டும்.



இலங்கை நிலவரத்தை எடுத்து நோக்குவோமானால் முஸ்லிம்கள் அரசியற் காரணங்களுக்காக இன்று ஓரம் கட்டப்பட்டிருக்கின்றனர். ஏற்கனவே 30 ஆண்டுகளுக்கு மேலாகத் தலைவிரித்தாடிய இனப்பிரச்சினையினால் சூடுகண்டுள்ள பெரும்பான்மை மக்களின் வாக்குகளை ஒருமுகப்படுத்திச் சிறுபான்மையின் அனுசரணையற்ற பெரும்பான்மை ஆட்சியினை இலக்குவைத்துச் சிறுபான்மையைப் பொது எதிரியாகச் சித்தரிக்கின்ற வேலைத்திட்டத்தில் முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்பட்டனர். முஸ்லிம்களை ஓரம்கட்டும் நடவடிக்கைகள் இன்றைக்குப் பல முனைகளில் இருந்தும் முடுக்கி விடப்பட்டிருப்பது தெரிந்த விடயம்தான். (கடந்த காலங்களில் ஆட்ச்சியைத் தீர்மானிக்கும் சக்தியாகச் சிறுபான்மைக் கட்சிகள் - குறிப்பாக முஸ்லிம் கட்சிகள் இருந்துள்ளன.)

அந்த வேலைத்திட்டத்தின் பகுதிகளாக இந்த நாட்டில் தனியான ஒரு இனக்குழுவாக முஸ்லிம்கள் அனுபவிக்கும் வரப்பிரசாதங்களை இல்லாமலாக்குதல், முஸ்லிம்களின் இருப்புக்கு ஆதாரமாக விளங்குகின்ற தனித்துவ அடையாளங்களை அழித்தல், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழுகின்ற பகுதிகளில் அவர்களின் பிரதிநிதிகளைக் குறைப்பதற்கு எதுவாக எல்லைகளை நிர்ணயம் செய்தல் போன்ற பல அம்சங்கள் அடங்குகின்றன.

அதன் தொடர்ச்சியே கடந்த அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்கின்ற எண்ணக்கருவாகும். அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றிக் கொள்கின்ற நோக்கத்திற்காக வேரூன்றச் செய்யப்பட்டிருக்கின்ற இந்த எண்ணக்கருவானது நாட்டில் காணப்படுகின்ற தனியார் சட்டங்களுக்குக் கணிசமான அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த அரசாங்கமானது ஒரே நாடு ஒரே சட்டம் என்ற எண்ணக் கருவை நடைமுறைப்படுத்துவதற்காகத் தனியார் சட்டங்களை இல்லாமல் ஆக்குவதைத் தமது நிகழ்ச்சி நிரலாகக் கொண்டிருந்தது. ஆனாலும் அந்த அரசாங்கம் எதிர்நோக்கிய சில நெருக்கடிகள் காரணமாக இந்த நிலைப்பாட்டில் இருந்து சற்றுத் தளர்வான போக்கினைக் கைக்கொள்ள வேண்டியிருந்தது. ஆனால் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்தில் உள்ள சில குறைபாடுகளை நிவர்த்திக்கும் முகமாக இச்சட்டத்தைத் திருத்த வேண்டும் என்ற கோரிக்கை பல காலமாக முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த சட்டத்தினைத் திருத்துவதனூடாக கடந்த அரசாங்கம் தனது இலக்கை அடைந்து கொள்ள முற்பட்டதா என்ற சந்தேகம் முஸ்லிம் சமூகத்தில் காணப்படுகின்றது.

தற்போது முஸ்லிம் விவாக விவாகரத்துச்சட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள பல திருத்தங்கள் ‘ஒரே நாடு ஒரே சட்டம்’ என்ற எண்ணக்கருவின் நோக்கத்தினை நிவர்த்திப்பதாகவே அமையப் பெற்றுள்ளன.

முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திற்கு முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் பல அதிருப்தியான விடையங்கள் சமூகத்தால் உணரப்பட்டன. அவையாவன:

குறித்த திருத்தங்களில் வெளிப்படைத் தன்மை பேணப்படவில்லை.

அவை பகிரங்க விவாதங்களுக்கு/கலந்துரையாடல்களுக்கு விடப்படவில்லை.

முஸ்லிம் தனியார் சட்டம் ஒரு சமூகத்தின் மதம் சார்ந்த விதிமுறைகளை உள்ளடக்கிய சட்டமாக இருக்கின்ற போதும் மார்க்க அறிஞர்களின் அபிப்பிராயங்கள் சுயாதீனமாகப் பெறப்படவில்லை.

என்பனவாகும்.

எனவேதான் இப்போது முன்மொழியப்பட்டுள்ள சட்டத் திருத்தங்கள் முஸ்லிம்களை அவர்களது மார்க்கத்தைச் சுதந்திரமாகப் பின்பற்றுவதில் இருந்து ஒடுக்கும் ஒரு முயற்சியாக இருக்குமோ என்கின்ற சந்தேகம் சமூகத்தில் வலுப்பெற்றுள்ளது.

இது இவ்வாறிருக்க, குறித்த சட்டத் திருத்தம் தொடர்பில் முன்னாள் நீதி அமைச்சர் அவர்களுக்கு ஆலோசனை வழங்கவென அமைக்கப்பட்ட குழுவினால் முன்வைக்கப்பட்ட சில திருத்தங்களை எமக்கு காணக் கிடைத்தது. (இது உத்தியோகப் பற்றற்ற வகையில் ஒரு இணைய வழி கலந்துரையாடலில் வெளியிடப்பட்டவையே)

இவ்வாறு வெளியிடப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்ற பொழுது திருமணத்திற்கான ஆகக் குறைந்த வயதெல்லை ‘வலி’யின் சம்மதம், பலதார மணம், காதி நீதிமன்றங்களில் செய்யப்படவிருக்கும் மாற்றங்கள், பெண்களைக் காதிகளாக நியமித்தல், திருமணத்தைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்குதல் போன்ற விடையங்கள் தொடர்பாக முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்கள் சமூகத்தில் பல எதிர்மறையான விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்ற ஐயத்தை எமக்கு ஏற்படுத்துகின்றன.

இலங்கையின் இன்றய அரசியற் சூழல் மேலே சொல்லப்பட்ட நிலையில் இருந்து கணிசமாக மாற்றம் அடைந்துள்ளதை எம்மால் அவதானிக்க முடிகிறது. சிறுபாண்மை மீது விதைக்கப்பட்ட வெறுப்புணர்வைக் கண்மூடித்தனமாக நம்புகின்ற மனநிலையில் இருந்து பெரும்பான்மை சமூகம் ஓரளவு விழிப்புணர்வு பெற்றிருக்கின்றது. அரசியல் தேவைகளுக்காக அவர்கள் பிழையாக வழிநடாத்தப்பட்டுள்ளனர் என்பதை உணர்ந்திருக்கின்றது. ஆனாலும் இது எத்தனை காலத்துக்கு நீடிக்கும் என்பது கேள்விக்குறி. இருப்பினும் தற்போதைய அரசாங்கத்திற்கு இனவாதிகளின் பிடியில் இருந்து ஒரு அவகாசம் கிடைத்திருக்கின்றது. இது நீடிக்குமா என்பது விடைதெரியாத வினாவாகினும் தற்போதைக்கு அதன் கெடுபிடி இல்லை என்பது வெளிப்படை. கடந்த அரசாங்கத்தைப் போன்று தற்போதுள்ள அரசாங்கம் முஸ்லிம்களை ஒடுக்குகின்ற ஒரு அணுகு முறையைக் கையாள மாட்டாது என இலங்கை முஸ்லிம் சமூகம் வெகுவாக நம்புகின்றது. மேலும் எமது தாய் நாட்டின் சுபீட்சம் கருதி நாட்டில் இன நல்லிணக்கத்தைக் கட்டி எழுப்பும் நடவடிக்கையை இந்த அரசு இதயசுத்தியுடன் செய்யும் என்ற எதிர்பார்ப்பும் எமக்கு இருக்கிறது.

எனவே முஸ்லிம் சமூகத்தித்திற்கு எதிராக, கட்டமைக்கப்பட்ட ‘இஸ்லாம் எதிர்ப்பு வாதம்’ (இஸ்லாமோ போபியா) இனால் எமது சமூகம் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியாகவும் இலக்கு வைக்கப்பட்டுள்ள நிலையில், இந்நாட்டில் முஸ்லிம்கள் தொடர்பாகச் செய்யப்படுகின்ற எந்த ஒரு முன்னெடுப்பும் இஸ்லாமிய எதிர்ப்பு வாதத்தினால் நன்மை அடைய நினைக்கும் சக்திகளின் நிகழ்ச்சி நிரலினுள் விழுந்து விடாமல் பாதுகாப்பதில் தற்போதைய அரசாங்கத்திற்குள்ள பொறுப்பினை வலியுறுத்துவது எமது சமூகத்தினதும் அதன் பிரதிநிதிகளினதும் கடமையாகும். அத்தோடு அந்த முன்னெடுப்புகள் இந்நாட்டில் முஸ்லிம்கள் காலாகாலமாக அனுபவித்து வருகின்ற, அரசியல் அமைப்பினால் பாதுகாக்கப்பட்டுள்ள எந்த வரப்பிரசாதங்களையும் பாதிக்காத வகையில் அமைவதற்கு அரசாங்கம் உத்தரவாதம் வழங்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை, முயற்சிகளை எமது சமூகம் செய்தல் வேண்டும். அந்தவகையில் முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டத்திற்கு முன்மொழிக்கப்பட்டுள்ள திருத்தங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இத்திருத்தங்கள் தற்போதுள்ள சட்டத்தை மேம்படுத்துவதாக அமைவதையும் தற்போது முஸ்லிம்கள் அனுபவிக்கும் அனைத்து விதமான உரிமைகளையும் மீள் வலியுறுத்துவதாகவும் இருப்பதை உத்தரவாதப்படுத்துவது இன்றியமையாதது.

இலங்கை வாழ் முஸ்லிம் சமூகம் இந்நாட்டில் தேசப்பற்று மிக்கவர்களாக ஆயிரம் வருடங்களுக்கு மேலான வரலாற்றை நிறுவியுள்ளனர். இந்நாடு பல இக்கட்டான சூழ்நிலைகளை எதிர்கொண்ட போதெல்லாம் நாட்டின் ஆட்சியாளர்களுடன் இணைந்து செயல்பட்டு அவற்றை எதிர்கொள்ள பூரண ஒத்துழைப்பை வழங்கி வந்துள்ளனர். ஆனால் துரதிஷ்டவசமாக அரசியல் காரணங்களுக்காக அண்மைக்காலமாக எமது சமூகம் இந்நாட்டில் ஓரங்கட்டப்பட்டுள்ளது. இந்த நிலைமையில் இருந்து எமது சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதத்திற்கான தருணம் இது. அதைச் சரிவரைச் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் சமூகமாக நாம் முன்னெடுக்க வேண்டும். இது எம் அனைவரின் மீதும் சுமத்தப்பட்டுள்ள (பர்ழ் கிபாயா) கடமையாகும்.



சட்டத்தரணி
ஷிபானா ஷரீபுத்தீன்

# அருகம்பையிலும் உலக சுற்றுலா தினம்


















**(அஷ்ரப் ஏ சமத்)**

உலக சுற்றுலா தினம் அக்டோபர் 1ஆம் திகதி பொத்துவில் அருகம்பையிலும் நடைபெற்றது. இந் நிகழ்வினை இலங்கை சுற்றுலா மற்றும் கைத்தொழில் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம். ஜவ்பர் ஏற்பாட்டில் நடைபெறறது.

இந் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சுற்றுலத்துறை இராஜாங்க அமைச்சர் டயானா கமகே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அத்துடன் தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் ரமீஸ் அபுபக்கர், அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ டக்லஸ் மேலதிக அரசாங்க அதிபர் வீ.ஜெகதீசன், மற்றும் அருகம்பை சுற்றுலா விடுதி உரிமையாளர்கள், பொத்துவில் பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸ், இராணுவ அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் ஒரு நாளைக்கு 2 இலட்சம் சுற்றுலாப்பிரயாணிகள் தங்கி நிற்கக் கூடிய அளவுக்கு சுற்றுலா ஹோட்டல்கள் அரைகள் உள்ளன. ஆனால் தற்பொழுது ஓர் நாளைக்கு 1000 பேர் மட்டுமே சுற்றுலா பிரயாணிகள் இலங்கை வருகின்றனர். எரிபொருள் விலை அதிகரிப்பு, உணவுப் பொருட்கள் விலை ஏற்றம், மற்றும் உள்ளூர் வெளிநாட்டு விமான சேவைப் போக்குவரத்து பிரயாணத்துக்குரிய செலவுகள் டொலர் அதிகரிப்பினால் மும்மடங்காக பெருகியுள்ளது. இவற்றினை அரசு கருத்திற் கொள்ளல் வேண்டும்.

இலங்கையில் கடந்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல், கொவிட் 19, தொற்று நோய், மற்றும் பொருளாதாரப் பிரச்சினையில் சிக்கித் தவித்தது.. இக் கால கட்டத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளினால் இத்துறை வெகுவாக வீழ்ச்சி கண்டுள்ளது.

இலங்கையின் அன்னியச் செலவானியினை சம்பாதித்துத் தருவது சுற்றுலாத்துறையாகும். இத்துறையே கடந்த காலங்களில் முதலிடம் வகித்தது. .இத்துறையில் மட்டுமே நமது நாட்டுக்குத் தேவையான டொலர்களையும் வெளிநாட்டுச் செலவானிகளைச் சம்பாதிக்க முடியும்.

இத்துறையை நம்பி நமது நாட்டில் இரண்டு மில்லியம் போர் நேரடியாகவும் மறைமுகமாகவும் நாளந்த வருமானத்தினைப் பெருபவர்கள் உள்ளனர்.. இத்துறை சார்ந்த தொழிலாளர்கள் கடந்த இரண்டு வருடகாலமாக தமது வருமானத்திலும் ஜீவனோபாயத்திலும் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்..

தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க அவர்கள் பல்வேறு வெளிநாடுகளுக்கு சென்று அந் நாடுகளில் உள்ள சுற்றுலா பிரயாணிகளை மீள இலங்கைக்கு அழைப்பதிலும் சுற்றுலாததுறையை வளர்ப்பதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் முயற்சி எடுத்து வருகின்றார்.. அத்துடன் இத்துறையை கட்டியெழுப்புவதற்காக இளம் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ இராஜாங்க அமைச்சர் டயானா கமகே ஆகியோர் தலைமையில் பல முயற்சிகளை எடுத்து வருவதை நாம் ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம். . ஜனாதிபதி வெளிநாடுகளுக்குச் செல்லும்போது அந் நாடுகளில் உள்ள ஊடகங்களிலும் இலங்கையின் சுற்றுலாத்துறைப் பிரச்சாரங்களையும் சர்வதேச மட்டத்தில் வளர்த்து வருகின்றார்.

இத்துறையை வளர்ப்பதற்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இலங்கை அரசாங்கம் முற்றுமுழுதாக பல்வேறு பட்ட அர்ப்பணிப்புக்களை செய்தல் வேண்டும். அத்துடன் கொழும்பு தலைநகரிலும், பொத்துவில் அருகம்பை , மற்றும் ஹபரணை போன்ற பிரதேசங்களிலும உலக சுற்றாடல் தினம் அப்பிரதேச ஹோட்டல் உரிமையாளர்கள் அமைச்சு அதிகாரிகள் அரசாங்க அதிபர்கள் இணைத்துக் கொண்டு இத் தினத்தினையும் கொண்டாடி ஓர் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளதாகவும் ஏ.எம். ஜவ்பர் தெரிவித்தார்.





# ஈரானில் புதிய கலாச்சார புரட்சியா? ஹிஜாப்க்கு எதிரான போராட்டம் தொடருமா?

1979இல் நடந்த ஈரான் இஸ்லாமியப் புரட்சியில் பெண்கள் முக்கிய பங்கு வகித்தமையினால், முன்னைய ஆட்சியாளர் முகமது ரெசா ஷா பாஹ்லவி அதிகாரத்தை விட்டு வெளியேற்ற பெரிதும் உதவியது வரலாற்று சான்றாகும். ஆனால் அயோத்துல்லா கொமேனி ஈரான் மீது கட்டுப்பாட்டை எடுத்தபின், கணிசமான எண்ணிக்கையில் பெண்கள் தங்கள் உரிமைகளை இழந்தனர் என்பதும் உண்மையே.

ஈரானிய புரட்சியின் பின்னரே, எல்லா பெண்களும் தொலைக்காட்சியில் செய்தி அறிவிப்பாளர்கள் உட்பட ஹிஜாப் கட்டாயமாக அணிய வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவிட்டது.

1989 இல் கோமினியின் மரணத்திற்குப் பிறகு, மகளிர் மீதான கடுமையான சட்டத்தின் சில பகுதிகள் நீக்கப்பட்டன.

குறிப்பாக தெஹ்ரான் மற்றும் பிற பெரிய நகரங்களில் உள்ள பெண்கள், சுதந்திரமாக வெளியே செல்லத் துவங்கினர், ஆனால் தங்கள் தலைமுடி மற்றும் முழுமையான ஒப்பனை கொண்ட ஹிஜாப் அணிந்தே செல்ல வேண்டியிருந்தது.

**கடுமையான ஆடைக் கட்டுப்பாடு:**

ஆயினும்கூட, 19%9ஆம் ஆண்டின் பின்னர் ஈரான் பெண்களுக்கு பலவீனமான உரிமைகளேயே தொடர்ந்து எதிர்கொண்டனர். ஈரானில் பெண்களுக்கான உடை கட்டுப்பாடு கடுமையாக பின்பற்றப்பட்டு வருகிறது. ஹிஜாப் கட்டுப்பாடுகளை மீறும் பெண்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் நாடான ஈரானில், எல்லா நேரங்களிலும் பெண்கள் ஹிஜாப் அணிய வேண்டும், 7 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தலைமுடியை முழுதும் மறைக்கும் வகையில் கட்டாயம் ஹிஜாப்பை அணிய வேண்டும் என்று அரசு கடுமையான ஆடைக் கட்டுப்பாட்டை விதித்திருக்கிறது. இதன் காரணமாக, இரான் அதிபர் இப்ராஹிம் ரெய்சிக்கு அந்த நாட்டுப் பெண்களும், சமூகச் செயற்பாட்டாளர்களும் கடும் எதிர்ப்பு தெரிவித்துவருகின்றனர்.

**குர்திஷ் பெண் அடித்துக் கொலை :**

ஹிஜாப் அணியாத 22 வயதான குர்திஷ் பெண் இரு வாரங்களுக்கு முன் அடித்துக் கொலை செய்யப்பட்ட பின் ஈரானில் போராட்டம் தீவிரம் அடைந்தது. குர்திஷ் பெண் மக்சா அமினியின் உடல், செப்டம்பர் 17 அன்று காலை, அடக்கம் செய்வதற்காக அவரது தாயகமான குர்திஸ்தான் மாகாணத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. ஹிஜாப் அணியாததால் இளம் பெண் அடித்து கொல்லப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து ஈரானில் குர்திஷ் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**குர்திஸ்தானில் ஹிஜாப் விவகாரம்:**

ஈரான் நாட்டில் பெண்கள் ஹிஜாப் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் குர்திஸ்தானில் சரியாக ஹிஜாப் அணியவில்லை எனக் கூறி மாஷா அமினி என்பவரை இரு வாரத்திற்கு முன் போலீசார் கைது செய்தனர். அதனைத் தொடர்ந்து காவல் நிலையத்திற்கு அழைத்து செல்லப்பட்ட இளம்பெண்ணை போலீசார் கடுமையாக தாக்கியதாக தெரிகிறது. இதில் படுகாயமடைந்த அவர் மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

**ஈரானில் ஹிஜாபை கழற்றி எறிந்து போராட்டம்**

இந்தச் சம்பவத்தைக் கண்டித்து ஈரான் முழுவதும் பெண்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ஹிஜாப்பை கழற்றி எறிந்தும், அரசுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பியும் போராட்டம் நடத்தி வந்தனர். இதனால் ஈரானில் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

மக்சா அமினி இறந்ததை அடுத்து, ஈரானில் தொடர்ச்சியான போராட்டங்கள் வெடித்துள்ளன. ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆரம்பத்தில் ஈரான் தலைநகரான தெஹ்ரானில் உள்ள கஸ்ரா மருத்துவமனைக்கு வெளியே கூடினர். அங்கு தாக்குதலுக்கு உள்ளான அமினி சிகிச்சை பெற்று வந்தார். போராட்டக்காரர்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் மிளகாய்த்தூளைப் பயன்படுத்தியதாகவும், பலர் கைது செய்யப்பட்டதாகவும் மனித உரிமை அமைப்புகள் தெரிவித்துள்ளன.



**வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு**

குர்திஷ் மனித உரிமைகள் அமைப்பான ஹெங்காவைச் சேர்ந்த சோமா ரோஸ்டமி கூறுகையில், பதற்றத்தைத் தடுக்க எந்த சடங்கும் இல்லாமல் இறுதிச் சடங்கு நடத்த அமினி குடும்பத்தை அரச படைகள் கட்டாயப்படுத்தின.அரச படைகளின் எச்சரிக்கைகள் இருந்தபோதிலும், நூற்றுக்கணக்கான மக்கள் அமினியின் சொந்த ஊரான சாக்வேஸில் அடக்கம் செய்வதற்காக கூடினர். சிலர் சர்வாதிகாரி மரணிக்கட்டும்என ஸஅரசுக்கு எதிராக முழக்கங்களை எழுப்பினர்'' என அவர் கூறினார்.

குர்திஷ் சிவில் சமூக அமைப்புகள் குர்திஸ்தான் மாகாணம் முழுவதும் பொது வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தனர். ஈரானின் சர்வாதிகாரத் தலைவரான அயதுல்லா கமேனியின் சுவரொட்டிகளைக் கிழித்தெறிந்த சக்கேஸில் போராட்டக்காரர்களின் காணொளிகள் சமூக ஊடகங்களில் பரவியுள்ளன.

மஹ்சா அமினி இறந்ததை அடுத்து ஈரானில் தொடர் போராட்டங்கள் வெடித்தன. பெண்கள் தலைமுடியை வெட்டியும், ஹிஜாப்களை எரித்தும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கைதான அமினி கொடூரமாக தாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்த குற்றச்சாட்டை மறுத்த ஈரான் பொலிஸார், அவர் மாரடைப்பால் இறந்ததாகக் கூறினர். அமினியின் உறவினர் ஒருவர் கூறுகையில்,அவருக்கு இதய நோயின் வரலாறு இல்லை என்றார்.

அந்த வகையில் , 22 வயதான மஹ்சா அமினி என்ற இளம் பெண்ணை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். மறைக்கவில்லையென்றால் எங்களால் பாடசாலைக்கு செல்லவோ அல்லது வேலை செய்யவோ முடியாது. இந்த பாலின நிறவெறி ஆட்சியால் நாங்கள் சோர்வடைகிறோம், என்று அவர் எழுதினார்.

**34 போராட்டக்காரர்கள் பலி :**

இதையடுத்து , அமைதியான போராட்டக்காரர்கள் மீது ஈரானின் சக்சேஸ் பகுதியில் பாதுகாப்புப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

34 போராட்டக்காரர்கள் பலியானதுடன் பலர் காயமடைந்துள்ளனர்.

ஈரானிய அரசின் புதிய ஆடைக் கட்டுப்பாடு விதிமுறைக்கு எதிராக ஆத்திரமடைந்த சமூக ஆர்வலர்களும், பெண் செயற்பாட்டாளர்களும், அரசுக்கெதிராகப் போராட்டத்தில் இறங்கியிருக்கின்றனர். ஏராளமான பெண்கள் தனிப்பட்ட முறையில் தங்களின் தலைமுடியை வெட்டி, ஹிஜாப்பை எரித்து அரசுக்குத் தங்களின் எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றனர். அதன் வீடியோக்களும் சமூக வலைதளங்களில் வேகமாகப் பரவிவருகின்றன.

இது குறித்து இரானியப் பத்திரிகையாளர், மகளிர் செயற்பாட்டாளர் அலினெஜாட் (Masih Alinejad) ஆகியோர், போலீஸாரால், மஹ்சா அமினி கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக இரானியப் பெண்கள் தங்கள் தலைமுடியை வெட்டியும், ஹிஜாபை எரித்தும் தங்களின் கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள். பெண்கள், 7 வயதிலிருந்து தலைமுடியை மறைக்கவில்லையென்றால் பள்ளிக்குச் செல்லவோ, வேலை செய்யவோ முடியாது. இந்தப் பாலின வெறி ஆட்சியால் நாங்கள் மிகவும் சோர்வடைந்துவிட்டோம்' என

பதிவிட்டிருக்கின்றனர்.

**ஹிஜாப் எரித்து போராட்டம் :**

இந்நிலையில், பெண்கள் போராட்டம் தொடர்பாக ஈரானிய பத்திரிகையாளரும் ஆர்வலருமான மசிஹ் அலினெஜாட் டுவிட்டரில் ஒரு வீடியோவை பதிவு செய்துள்ளார்.

**அதில் அவர் கூறியிருப்பதாவது:**

ஈரானிய பெண்கள் தங்கள் தலைமுடியை வெட்டுவதன் மூலமும், ஹிஜாபை எரிப்பதன் மூலமும் தங்கள் கோபத்தை வெளிப்படுத்துகிறார்கள்.

**விளம்பரங்களில் பெண்கள் நடிக்கத் தடை :**

சில வருடங்கள் முனபும் மக்னம் ஐஸ்கிறிம் விளம்பரத்தில் ஈரானின் புனித விதிகளை மீறுவதாக விளம்பரத்தில் வரும் அப்பெண் தளர்வாக ஹிஜாப் அணிந்து கலாசாரத்தை மீறியுள்ளார் என்றும், அவர் கண்ணியமாக இல்லை என குற்றம் சாட்டப்பட்டது. இதன்பின் ஹிஜாப் மற்றும் ஒழுக்க விதிகளின்படி, பெண்கள் விளம்பரங்களில் நடிப்பதற்கு அனுமதி இல்லாமல் போனது.

ஈரானில் பெண்கள் மீதான கட்டுப்பாடுகள் மிகவும் கடுமையாக உள்ளன. குறிப்பாக ஹிஜாப் அணிவது, சமூக ஒழுக்கத்தை கடைப்பிடிப்பதை போன்ற வரையறைகள் மிகவும் தீவிரமாகக் கண்காணிக்கப்படுகின்றன. இந்த விதிகளை மீறும் பெண்களுக்குக் கடுமையான தண்டனைகளையும் ஈரானிய அரசு வழங்குகிறது.

இந்நிலையில், மேக்னம் (Magnum) ஐஸ்கிரீம் விளம்பரம் ஒன்றில் பெண் ஒருவர் தனியாக காரில் பயணிக்கும் போது, பக்கத்து இருக்கையை பார்த்து, சில முறை சிரிக்கிறார். பின்னர் காரை நிறுத்தி விட்டு இருக்கையில் கைவைத்து, மேக்னம் ஐஸ்கிரீமை எடுத்து காரில் இருந்து வெளியே வந்து ருசித்து சாப்பிடுகிறார்.

இந்த விளம்பரம் குறித்து, ஈரானின் கலாசாரம் மற்றும் இஸ்லாமிய வழிகாட்டுதல் அமைச்சகம், ஈரானின் புனித விதிகளை மீறுவதாக இந்த விளம்பரம் உள்ளது. விளம்பரத்தில் வரும் அப்பெண், கண்ணியமாக இல்லை, தளர்வாக ஹிஜாப் அணிந்து கலாசாரத்தை மீறியுள்ளார். ஹிஜாப் மற்றும் ஒழுக்க விதிகளின்படி, பெண்கள் இனி விளம்பரங்களில் நடிப்பதற்கு அனுமதி இல்லை' எனத் தெரிவித்துள்ளது.

இதன் பின்னர் ஈரானின் இஸ்லாமியக் குடியரசின் பொறுப்பு சரியானதை கட்டளையிடுவது, தீமையை தடுப்பது. பொது ஒழுக்கத்திற்கு எதிராகவும், பெண்களின் மதிப்புகளை அவமதிக்கும் வகையிலும் இரண்டு சர்ச்சைக்குரிய விளம்பரங்களை வெளியிட்டதற்காக குற்றம் சாட்டி ஐஸ்கிரீம் உற்பத்தியாளர் நிறுவனமான டோமினோவுக்கு எதிராக ஈரானிய அரசு வழக்கை தாக்கல் செய்ததும் அறிந்ததே.

**ஈரானில் புதிய கலாச்சார புரட்சி ?**

தற்போது பெண்களின் இந்த தொடர் போராட்டங்கள் ஈரானின் இஸ்லாமிய அடிப்படைவாத ஆட்சிக்கு எதிரான கோசங்கள் எழுப்பப்படுகின்றன. இஸ்லாமிய ஆட்சிபீடத்திற்கு எதிரான போராட்டமாக விரிவடையும் வாய்ப்பும் உள்ளது. இக்கால ஹிஜாப்க்கு எதிரான போராட்டம் தொடருமானால் ஈரானில் புதிய கலாச்சார புரட்சி உருவாகும் சாத்தியங்கள் தென்படுகின்றன.

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

# இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர், தமிழர் குடித்தோகையைக் குறைப்பதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் மேற்கோண்ட ஒடுக்குமுறைகளும் அழிப்புச் செயற்பாடுகளும்

**ராஜபக்ச ட்சியாளர்கள் தொல்லியல் ஆணைக்குழு மூலமாக சிங்கள பௌத்த கலாசாரத்தினை வடக்கு கிழக்கில் திணிப்பதன் மூலமாக சிங்கள பௌத்த மயமாக்கலை துரிதப்படுத்த முனைகின்றனர். அதனையே தமது அடுத்த தேர்தலுக்கான முதலீடாக்க நினைக்கின்றனர். முல்லைத்தீவுக் குருந்தூர் மலையில் தமிழர்களின் சமய கலாசாரத்தினை ஒடுக்கி பௌத்தவிகாரையை அமைத்து வருகின்றனர். நீதிமன்றத் தடையைக்கூட தொல்லியல் திணைக்களம் மதிக்கவில்லை. அதேபோல் வெடுக்குநாறிமலை, கரடியனாறு குசலானமலை, திருக்கோணேஸ்வரர் ஆலயக்காணி, வடமுனை நெடியகல்மலை போன்ற தமிழர்களின் கலாசாரத்தளங்கள் ஆக்கிரமிக்கப்படும் நெருக்கடிகள் உருவாக்கப்பட்டுள்ளன. மேலும் மட்டக்களப்பு எல்லைப்புறமாகவுள்ள மேய்ச்சல் தரைகளான மயிலத்தமடு, மாதவணை, கெவுளியாமடு, கறுவாச்சோலை போன்ற தாயக நிலங்கள் விவசாயம், சோளச்செய்கை, குடியேற்றம் என்றவகையில் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கபடுகின்னறன.**



இலங்கை சுதந்திரம் அடைவதற்குரிய பங்களிப்புகளை சிங்கள, தமிழ், முஸ்லிம் தலைவர்கள் அனைவரும் செய்திருந்தனர். ஐரோப்பியர் இலங்கையைக் கைப் பற்றும்போது நம்நாட்டுக்குள் சிங்கள, தமிழ் இராச்சியங்கள் என்ற ஈரின இராச்சியங்கள் காணப்பட்டன. ஆனால் இலங்கை சுதந்திரம் அடையும்போது பிரித்தானியரால் ஒற்றையாட்சிமுறை அரசியல்யாப்பு அறிமுகம் செய்யப்பட்டது. அதாவது தமிழர் இராச்சியங்கள் அகற்றப்பட்டு நாடு முழுவதும் ஒற்றையாட்சியான ஜனநாயக அரசியலுக்குள் கொண்டு வரப்பட்டது. இந்த யாப்பும், அரசாட்சி முறையும் அன்றைய %0 சதவீதமான பெரும்பான்மைச் சிங்கள சமூகத்திற்குச் சாதகமாக அமைந்தது. அந்த வகையில் ஆளும் கட்சியும் பிரதான எதிர்க் கட்சியும் சிங்களத் தலைவர்கள் கைகளுக்குள் சிக்கியது. ஆக 8 வருடங்கள் மாத்திரம் தமிழர்கள் இருவர் எதிர்க்கட்சித் தலைவர்களாக இருந்தனர். அதுவும்கூட பலமான எதிர்க்கட்சிகளாக இருக்க முடியவில்லை. ஆயின் சுதந்திரமடைந்த காலத்தில் இருந்து 74 ஆண்டுகளாக சிங்களத்தலைமைகளே ஆட்சி செய்கின்றன. எதிர்கட்சித் தலைவர்களாக 66 ஆண்டுகள் சிங்களத்தலைவர்களே இருந்தனர். சிங்களத்தலைமைகளோடு இணைந்து ஆட்சிப்பீடமேறிய சிற்சில தமிழர்கள் தமது பதவிகளைக் காப்பாற்றினார்களேயன்றி தமிழர்களைக் காப்பாற்றவில்லை. கூட்டுப்பொறுப்பு என்ற சிங்களக் கட்டளைக்குள் அடங்கிய பெட்டிப்பாம்புகளாகவே அவர்கள் இருந்தனர். இப்படியான நிலையில் ஸ்ரீலங்காவின் ஜனநாயகம் என்பது %2 சதவீதத்திலும் அதிகமான சிங்களவர்களின் ஜனநாயகமாக மாறியது. ஆளும் கட்சியும் அடுத்த ஆளும் கட்சியாகத்துடிக்கும் பிரதான எதிர்க்கட்சியும் சிங்கள வாக்குகளைப் பெறுவதற்காக பேரினவாதத்தை விதைத்தன. தமிழர்களின் உரிமைகளை எப்படியோ புதைக்க முற்பட்டனர். பல்லின நாடான இலங்கையை சிங்கள ஸ்ரீலங்கா நாடாக உலகுக்கும் காட்ட முற்பட்டனர். அதனை நியாயமான வழியில் எதிர்த்து சமத்துவ உரிமை கோரிய தமிழர்களை ஒடுக்குவதற்காக ஒழிப்பதற்காக, அழிப்பதற்காக நாட்டை விட்டுத் துரத்துவதற்காக, பல பேரினவாத கபட உத்திகள் உபாயங்களை சட்டரீதியாகவும், சட்டத்திற்குப் புறம்பாக மறைமுகமாகவும் சிங்கள அதிகார வர்க்கத்தினர் மேற்கொண்டனர். அவற்றை விரிவாகப் பார்ப்போம். இன்றைய இளம் தமிழ்த்தலைமுறையினர் இதனை அறிந்தாக வேண்டும். தறிகெட்டு நெறிகெட்டு சலுகைக்காய் பதவிக்காய் தலையாட்டும் பொம்மையர்களாகவுள்ள, ஆளும் கட்சித் தமிழ்ப் பிரதிநிதிகள் அமைச்சர்களும் இனியாவது விளங்கி சரியான பாதையில் நடைபோட வேண்டும்.

*1)1948-1956:* இக்காலத்தில் டி.எஸ் சேனநாயக்க, ஜோன் கொத்தலாவல, டட்லி சேனநாயக்க ஆகிய ஐக்கிய தேசியக்கட்சி தலைவர்கள் பிரதமர்களாக இருந்தனர். இக்காலத்தில் 1948 குடியுரிமைச்சட்டம, 1949 வாக்குரிமைச்சட்டம் கொண்டுவரப்பட்டன. இவற்றின் மூலமாக இலங்கையின் பெருந்தோட்டத் தொழிற்றுறைக்காக உழைத்து நாட்டின் பொருளாதாரத்திற்குப் பெரும்பங்காற்றிய மலையகத்தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் சுமார் 5 இலட்சம் பேர் நாடற்ற பிரசைகளாக்கப்பட்டனர். 194% தேர்தலில் % பிரதிநிதிகளை பாராளுமன்றத்திற்கு அனுப்பிய மலையகத்தமிழர்கள் 30 ஆண்டுகள் பிரதிநிதிகளற்ற அரசியல் அநாதைகளாக்கப்பட்டனர். இச்செயல் சிங்களவர்களின் தேசபிதாவான முதல் பிரதமர் டி.எஸ். சேனநாயக்கவின் தமிழினக்குறைப்பு சதியாக அமைந்தது. மேலும் இவரது ஆட்சியின் போது கல்லோயாவில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக் குடியேற்றத்திட்டம் மூலமாக அம்பாறை மாவட்டத் தமிழர் தாயகக் காணிகள் பறிக்கப்பட்டன. அயல் மாவட்ட சிங்களவர்களும் இங்கு குடியேற்றப்பட்டனர். இதுவும் கிழக்குத்தமிழர்களின் விகிதாசாரத்தைக் குறைக்கும் சூழ்ச்சிச்செயல்பாடாக அமைந்தது. அத்துடன் கிழக்கு மாகாணத்தில் தமிழர்களின் பெரும்பான்மை எண்ணிக்கையைக் குறைக்கும் முயற்சியாகவும் அமைந்தது.

*2) 1956-1965:* இக்காலத்தில் பண்டாரநாயக்க, தகநாயக்க, ஸ்ரீமா ஆகிய சுதந்திரக்கட்சியினர் பிரதமர்களாக இருந்தனர். 1956 இல் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்கள அரசகருமமொழிச்சட்டமானது தமிழ் இனத்தவர்களின் மொழியடையாளத்தை இல்லாமல் செய்து, ஸ்ரீலங்காவில் சகலரும் சிங்களமொழியாளர்கள் என்பதைக்காட்டும் சதிச்செயலாக அமைந்தது. மேலும் பண்டாவின் ஆட்சிக்காலத்தில் அவரால் 1957 இல் தமிழர் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தமிழரசுக் கட்சித் தலைவருடன் மேற்கொண்ட பண்டா-செல்வா ஒப்பந்தம் சிங்கள இனவாதத்தேவைக்காக கிழித்து வீசப்பட்டது. அத்தோடு நின்று விடாமல் தமிழர்களைத் தென்னிலங்கையில் இருந்து துரத்துவதற்காகவும் அவர்களது குடித்தொகையைக் குறைப்பதற்காகவும் 1958 இல் தமிழர்களுக்கு எதிராக இனவழிப்பு மேற்கொள்ளப்பட்டது. இதனால், பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேறிச் செய்வதற்கு சூழ்ச்சி செய்யப்பட்டது. அதேவேளை 1960 இல் ஆட்சிக்கு வந்த ஸ்ரீமாவின் காலத்தில் 1964 ஸ்ரீமா-சாஸ்திரி உடன்படிக்கை மூலமாக மலையகத் தமிழர்கள் 5 இலட்சம் பேர்வரை இலங்கையை விட்டு இந்தியாவுக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த நடவடிக்கையும் தமிழரகளின் குடித்தொகைக் குறைப்பாக அமைந்தது. இப்படியாக மலையகத் தமிழர்களுக்கு எதிராக மேற்கொண்ட அநியாயம் சாபக்கேடாகி நாட்டை அவலநிலைக்குத் தள்ளியுள்ளது.

*3) 1965-1970:* இக்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக ஆட்சிப் பீடமேறியவரும் அரசியலில் கனவான் என்று பேசபட்டவருமான பிரதமர் டட்லி சேனநாயக்க இனப்பிரச்சினைத் தீர்வுக்காக டட்லி - செல்வா ஒப்பந்தத்தை மேற்கொண்டார். பின்னர் ஒப்பந்தத்தை அவரே நடைமுறைப் படுத்தவில்லை, இதனால் தமிழர்களின் தாயக நிலங்கள் தொடர்ச்சியாக அபகரிக்கப்பட்டன. கனவானும் அரசியலுக்காக, சிங்கள இனவானாக மாற்றப்பட்டார்.

*4) 1970--1977:* இக்காலப்பகுதியில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து இடதுசாரிகள் ஆட்சிப்பீடமேறியிருந்தனர். ஸ்ரீமா அவர்கள் 19%2 இல் முதலாம் குடியரசு யாப்பினை இக்காலத்தில் அமைத்தார். இந்த யாப்பானது, பண்டாரநாயக்கவின் சிங்கள இனவாதத்தை மட்டுமல்லாமல் பௌத்தமத அடிப்படைவாதத்தினையும் அப்பட்டமாக வெளிக்காட்டியது. இந்த யாப்பானது தமிழர்களின் மொழிமத பண்பாடுகளை மறைத்தது. அந்த வகையில் சிங்களம் மட்டும் அரசகருமமொழி, பௌத்தம் மட்டும் அரசமதம் என்ற வகையில் ஸ்ரீலங்கா சிங்கள பௌத்தநாடு என்பதை அரசியல் சாசனரீதியாக நிறுவ முற்பட்டது. வக்கிரமான இந்த யாப்பு பல்வகைத்தன்மையான பண்பாடுகளையுடைய நாட்டின் கட்டமைப்பை யாப்புரீதியாக மறைத்தது. பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம், சிங்கள பௌத்தமயமாக்கம் என்பன இந்தயாப்பு மூலமாக முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டன. இக்காலத்தில்தான் தமிழ் இளைஞர்கள் வேறுவழியின்றி, சிங்கள பௌத்த தேசமாக்கப்பட்ட ஸ்ரீலங்காவில் இருந்து, தமது தமிழ்தேசத்தை வென்றெடுக்க ஆயுதம் ஏந்தத் தலைப்பட்டனர், நிர்ப்பந்திக்கப்பட்டனர். இக்காலத்தில் சட்டரீதியாகவும் சட்டத்திற்குப் புறம்பாகவும் இன ஒடுக்கு முறைகள் அழிப்புகள் இடம்பெற்றன. யாழ்ப்பாண தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிசாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் தமிழர்கள் கொல்லப்பட்டமையும் இக்காலக்கொடிய நிகழ்வாகியது. இக்காலத்தில் 19%1 இல் ஜே.வி.பியினரின் ஆயுதப்புரட்சி நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது. அம்மையாரின் ஆட்சிக்கலத்தில் திருகோணமலை மாவட்டத்தினுள் சேருவில என்ற சிங்களவர்களுக்கான தேர்தல்தொகுதி உருவாக்கப்பட்டது. இந்தச்சதியானது திருகோணமலையைச் சிங்களமயமாக்கும் பேரினவாதச் சூழ்ச்சி நகர்வாக அமைந்தது.

*5) 1977-1988:* இக்காலம் ஜெயவர்ததனாவின் 5/6 அசுரப்பெரும்பான்மை பலத்துடன் கூட்டிய சட்டமன்றம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறை கொண்ட காலமாகும். 19%9இல் நிறைவேற்றிய பயங்கரவாததடைச்சட்டம் அத்தோடு அவசரகாலச்சட்டம் என்பவற்றைக்கொண்டு ஒரு சர்வாதிகார தமிழின ஒடுக்கு முறையை ஜெயவர்தனா அரசு மேற்கொண்டது. கொத்தணியான பல படுகொலைகள், கொடிய சித்திரவதைகள் அன்றாட சாதாரண நிகழ்வுகளாக மாறின. தமிழர்களை பழிதீர்த்த இப்பயங்கரச்சட்டத்திற்கான பிரேரணையானது, தமிழமைச்சராக இருந்த தேவநாயகம் அவர்களால் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டதாகும். ஏந்தளவுக்குக் கூட்டுப்பொ

மிகுதி 13 ஆம் பக்கம் பார்க்க...



ஜி. ஸ்ரீநேசன்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், மட்டக்களப்பு

# இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பின்னர், தமிழர் குடித்தொகையைக் குறைப்பதற்காக ஸ்ரீலங்கா அரசாங்கங்கள் மேற்கொண்ட ஒடுக்குமுறைகளும் அழிப்புச் செயற்பாடுகளும்



றுப்புக் கட்டளைக்கு நமது தமிழ் அமைச்சர்கள் அடங்கியுள்ளார்கள் என்பதை இதில் இருந்து அறிய முடிகிறது.இப்பயங்கரவாததடைச் சட்டம் தமிழ்க்கைதிகளிடம் சித்திரவதைகள் மூலமாக ஒப்புதல் வாக்கு மூலங்கள் பெறப்பட்டு,அவற்றை ஆதாரமாகக்கொண்டு மரணதண்டனைகள்கூட நிறைவேற்றப்பட உதவின.கொடிய செயல்களின் உச்சமாக தமிழர்களுக்கு எதிராக 83 கறுப்பு யூலை என்ற இனவழிப்பு ஒடுக்குமுறை நடைபெற்றது.3000 தமிழர்கள்வரை கொல்லப்பட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.இக்காலத்தில் வெலிக்கடைச் சிறைச்சாலைப்படுகொலை,கொக்கட்டிச்சோலைப்படுகொலை,உடும்பன்குளம் படுகொலை,குமுதினிப்படகுப் படுகொலை என்று பல இனவழிப்புகள் நடைபெற்றன.இதன் மூலமாகவும் தமிழரகளை ஒடுக்கி அழித்து நாட்டை விட்டு அகற்றும் சதிவேலை முன்னெடுக்கப்பட்டது.பல்லாயிரக்கணக்கில் இளைஞர்கள் இன விடுதலைக்காக தமிழ் இயக்கங்களில் இணைந்து ஆயுதமேந்தினர்.மேலும் தமிழர்கள் நாட்டைவிட்டும் வெளியேறினர்.

*6) 1988--1993:* இக்காலப்பகுதியில் பிறேமதாச ஜனாதிபதியாக இருந்தார்.இவர் 1988-1990 காலப்பகுதியில் ஜே.வி.பி யினரின் கிளர்ச்சியைக் கடுமையாகவும் கொடுமையாகவும் அடக்கியிருந்தார்.அதனை விடவும் கொடுமையான பாணியில் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களை ஒடுக்க முற்பட்டார்.அதிரடிப்படை,முப்படையினரைப் பயன்படுத்தி பல இனவழிப்புகள் செய்யப்பட்டன.வந்தாறுமூலைப் பல்கலைக்கழக அகதிகள் முகாம்,சத்துருக்கொண்டான்,குமாரபுரம்,வீரமுனை,மகிழடித்தீவு,காரைதீவு,புதுக்குடியிருப்பு என்று பல இடங்களில் தமிழினப்படுகொலைகள் மேற்கொள்ளப்பட்டன.மாகாணசபைக்கு வழங்கப்பட்ட காணி அதிகாரங்கள்,பொலிஸ் அதிகாரங்களை அமுலாக்கவில்லை.இதன் மூலமாக வடக்கு கிழக்குத் தாயகக்காணிகள் மத்தியரசினால் ஆக்கிரமிக்கப்படவும்,தமிழர்கள் பாதுகாப்பற்ற நிலையில் அங்கிருந்து வெளியேற்றப்படுவதற்கும் வழிவகுக்கப்படடன.

*7) 1994--2005:* இக்காலப்பகுதியில் சந்திரிக்கா ஜனாதிபதியாக இருந்தார்.இவர் காலத்திலும் இனப்படுகொலைகள் நடைபெற்றன.செம்மணிப்புதைகுழி,நாகர் கோவில் படுகொலை,சென்பீற்றர் தேவாலயப்படுகொலை,கிரிசாந்தி உட்பட குடும்பத்தினர் படுகொலை என்று இனப்படுகொலைகள் நடைபெற்றன.யாழ்குடா மீட்பு என்ற பெயரில் படையெடுப்பு நடைபெற்றது.அதில் பல்லாயிரக்கணக்கணக்கான தமிழர்கள் வாழ்விடங்களை இழந்து அகதிகளாக அல்லல்படும் நிலைமை ஏற்பட்டது.பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் தமது உயிர்களை இழந்தனர்.தமிழர்களின் காணிகள் பல ஏக்கர்கள் படையினரால் கையகப்படுத்தப்பட்டன.2002 இல் அப்போதைய பிரதமர் ரணில் தலைமையில் விடுதலைப்புலிகளோடு செய்துகொள்ளப்பட்ட சமாதான ஒப்பந்தத்தை குழப்பும் நோக்குடன் ரணிலின் அரசாங்கத்தை சந்திரிக்கா இரண்டே ஆண்டுகளில் அதாவது 2004 இல் கலைத்துவிட்டார்.இதனால் மீண்டும் சந்திரிக்கா யுத்தத்திற்கு கால்கோளிட்டார்.அதாவது இனமோதல்கள் தமிழின அழிப்புகளுக்கு வாய்ப்பளிக்கப்பட்டன.

*8) 2005-2015:* இக்காலப்பகுதியில் மகிந்த ராஜபக்ச அவர்கள் ஜனாதிபதியாக இருந்தார். இவர் காலத்தில் நோர்வே அனுசரணையில் நடைபெற்ற சமாதான ஒப்பந்தம் கைவிடப்பட்டது.பல நாடுகளின் பலமான உதவிகளப்பெற்று மக்கள் மீட்பு யுத்தம் என்ற பெயரில் தமிழின அழிப்பு யுத்தத்தை ஆரம்பித்தார்.அவருக்கு ஏற்ற துணையாக அவரது சகோதரர் கோத்தபாய பாதுகாப்புச் செயலராக நியமிக்கப்பட்டார்.வடக்கு கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட கோடூரமான யுத்தம் முள்ளிவாய்க்காலில் இறுதியில் பாரிய இனவழிப்பு யுத்தமாக முடிவுற்றது.146,000 இற்கும் அதிகமான தமிழர்கள் அழிக்கப்பட்டதாக மன்னாரின் முன்னாள் ஆயர் இராயப்பு யோசேப் மதிப்பிட்டிருந்தார்.கைது செய்யப்பட்டவர்கள்,சரணடைந்தவர்கள் என்று ஆயிரக்கணக்கான தமிழர்கள் காணாமல் ஆக்கப்பட்டனர்.செஞ்சோலைச் சிறுவர்கள் படுகொலை,மூதூர் தன்னார்வத்தொண்டர்கள் படுகொலை,மிரிசுவில் படுகொலை,திருகோணமலை மாணவர்கள் படுகொலை,தமிழர் புனர்வாழ்வுக்கழக உறுப்பினர்கள் படுகொலை என்று பல கொத்தணிக் கொலைகள் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் நடந்தேறின.கடத்தல்,காணாமல் ஆக்குதல் அன்றாட சர்வசாதாரண நிகழ்வுகளாகின.அவற்றை விடத் தமிழர் தாயக நிலக்காணிகள் ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பலநுட்பப்பொறிமுறைகள் மூலமாக கபளீகரம் செய்ய்பபட்டுள்ளன.

*9) 2015-2019:* இக்காலத்தில் மைத்திபால சிறிசேன ஜனாதிபதியாகவும்,ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவும் இருந்தார்கள்.இனப்பிரச்சினையைத் தீர்ப்பதாகக்கூறி பாராராளுமன்றம் யாப்பு நிருணயசபையாக மாற்றப்பட்டது. ஆனால் அந்த முயற்சி மகிந்த,மைத்திரி ஆகியோரின் சதிமுயற்சிகளால் குழப்பி அடிக்கப்பட்டது. இறுதி யுத்த இனவழிப்பு,வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பிரச்சினைகளுக்கான உண்மைகளைக் கண்டறிதல்,பொறுப்புக்கூறல்,நீதிவழங்கல் என்பன இழுத்தடிக்கப்பட்டன.

*10) 2020-2022:* இக்காலப்பகுதியில் கோத்தபாய ஜனாதிபதியாகவும்,மகிந்த பிரதமராகவும் தெரிவசெயப்பட்டனர்.தேர்தலில் பேரினவாதம் உச்சமாகச் சந்தைப்படுத்தப்பட்டன.சிங்கள பௌத்தர்களின் ஆட்சி என்ற உச்சாடனங்கள் ஓதப்பட்டன.சிங்கள பௌத்த தொல்லியல் ஆணைக்குழு அமைக்கப்பட்டு தமிழர்களின் கலாசார பூமிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகள் வடக்கு கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படுகின்றன.பௌத்தசாசன அமைச்சினை மாத்திரம் கொண்ட நாடாகக்காட்டுவதற்காக தமிழ்பேசும் மக்களின் இந்து இஸ்லாமிய கிறிஸ்தவ அமைச்சுகள் மறைக்கப்பட்டுள்ளன.சிங்களத்தில் மட்டும் தேசியகீதம்,பகிரங்க நினைவேந்தல் தடைகள்,பயங்கரவாத்தடைச்சட்டத்தின் கீழ் இளைஞர்கள் கைது,பொலிஸ் இராணுவக்கெடுபிடிகள்,காணிகள் அபகரிப்புகள் என்றவகையில் தமிழர்கள் மீண்டும் ஒடுக்கப்படும் சூழலை ராஜபக்ச அரசாங்கம் செயற்படுத்தியது.மணித்தியாலத்திற்கு 32 ஆட்கள் என்ற அடிப்படையில் இந்நாட்டில் இருந்து மக்கள் பிறநாடுகளுக்கு ஓட்டம் எடுக்கும் நிலை தோன்றியுள்ளது.குறிப்பாகத் தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டுள்ளது.இந்தியாவுக்கு தமிழர்கள் மீண்டும் அகதிகளாச்செல்லும் நிலை ஆட்சியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக தென்னிலங்கையில் மக்கள் போராட்டம் வெடித்தது.ராஜபக்சக்கள் பதவிகளை இழக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது.ரணில் பாராளுமன்றத்தின் மூலமாக ஜனாதிபதியாக்கப்பட்டார்.ஆனால் அவர் மொட்டுக்கட்சியினரின் பலத்தில் செயற்படும் ஒருவராகவுள்ளார்.இதனால் நிலக்கையகப்படுத்தல்கள்,பௌத்த கலாசாரத்திணிப்புகள் தொடர்ந்தும் நடைபெறுகின்றன.

சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் தாயகக் காணிகளைப்பறிப்பதற்கு கையகப்படுத்துவதற்கு பல சட்ட ரீதியான உத்திகளைக் கையாண்டனர். அரசகாணி,மறுசீரமைப்புக்காணி.தொல்லியல் திணைக்களக்காணி,வனவளத்திணைக்களக்காணி,வனசீவராசிகள் திணைக்களக்காணி,கரையோரப்பாதுகாப்புக்காணி என்ற பெயர்களில் சிங்கள ஆதிக்க மத்தியரசினால் வடக்கு கிழக்கு தமிழர்தாயகக்காணிகள் கையகப்படுத்தப்பட்டன.மேலும் மாகாணசபைகள் நடைமுறைக்கு வந்தபின்னர்,கிழக்கு மாகாண ஆளுனர்கள்,காணிக்குப் பொறுப்பான அமைச்சர்கள்,உயர் அதிகாரிகள் சிங்களவர்களாகவே இருக்கவேண்டும் என்ற எழுதப்படாத விதிகள் பின்பற்றப்பட்டன.இவற்றையும்விட வடக்கு கிழக்கு மாகாண எல்லைகளிலுள்ள தமிழர்களின் மேய்ச்சல்தரைக்காணிகள்,உறுதிக்காணிகள்,ஒப்பக்காணிகள் கூட வன்முறைகள் அச்சுறுத்தல்களைக்கொண்டு பேரின அடிப்படைவாதிகளால் பறிக்கப்பட்டன.இதற்கு சிங்கள அமைச்சர்கள்,சிங்கள அதிகாரிகள்,பௌத்த குருமார்கள் ஒத்துழைப்பு வழங்கி வந்துள்ளனர்.

ராஜபக்சட்சியாளர்கள் தொல்லியல் ஆணைக்குழு மூலமாக சிங்கள பௌத்த கலாசாரத்தினை வடக்கு கிழக்கில் திணிப்பதன் மூலமாக சிங்கள பௌத்தமயமாக்கலை துரிதப்படுத்த முனைகின்றனர்.அதனையே தமது அடுத்த தேர்தலுக்கான முதலீடாக்க நினைக்கின்றனர்.முல்லைத்தீவுக் குருந்தூர் மலையில் தமிழர்களின் சமயகலாசாரத்தினை ஒடுக்கி பௌத்தவிகாரையை அமைத்து வருகின்றனர்.நீதிமன்றத்தடையைக் கூட தொல்லியல் திணைக்களம் மதிக்கவில்லை. அதேபோல் வெடுக்குநாறிமலை,கரடியனாறு குசலானமலை,திருக்கோணேஸ்வரர் ஆலயக் காணி,வடமுனை நெடியகல்மலை போன்ற தமிழர்களின் கலாசாரத்தளங்கள் ஆக்கிரமிக்கப்படும் நெருக்கடிகள் உருவாக்கப்பட்டுளளன.மேலும் மட்டக்களப்பு எல்லைப்புறமாகவுள்ள மேய்ச்சல்தரைகளான மயிலத்தமடு,மாதவணை,கெவுளியாமடு,கறுவாச்சோலை போன்ற தாயக நிலங்கள் விவசாயம்,சோளச்செய்கை, குடியேற்றம் என்றவகையில் சிங்களவர்களால் ஆக்கிரமிக்க படுகின்னறன.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இலங்கையின் சுதந்திரம் என்பது சிங்கள அதிகாரவர்க்கத்தின் சொர்க்கமாக அமைந்ததேயொழிய மக்களின் சுதந்திரமாக அமையவில்லை.அதிலும் குறிப்பாக தமிழ்மக்களை ஒடுக்கும் ஒழிக்கும் குறைக்கும் சிங்கள பௌத்த ஒற்றையாட்சி மேலாதிக்க சாசனத்தின் வடிவமாக சுதந்திரம் அமைந்தது.இதனால் தமிழினக்குறைப்பு,இனவழிப்பு,கலாசார அழிப்பு,உணர்வழிப்பு,நிலப்பறிப்பு போன்ற கபட தந்திரங்களை சிங்கள பௌத்த மேலாதிக்க வர்க்கம் கைக்கொண்டது.இதனால் தேசிய ஐக்கியம்,தேச அபிவிருத்தி,இறையாண்மை,நாட்டின் கௌரவம் எல்லாம் பலவீனமாகி நாடு குட்டிச்சுவராகியது.ஆளும் வர்க்கம் மாத்திரம் வறுமையான தேசத்தில் வளமாக வாழ்கின்றனர். அதற்கு ஊழல்,மோசடிகள்,கையூட்டுகள்,கறுப்புப்பணங்கள் கைகொடுத்து உதவின.இவையும் அடிப்படைவாதமும் ஒழிக்கப்படாதவரை நாட்டுக்கும் மக்களுக்கும் விமோசனம் கிடையாது.




திருக்கொடியேற்றம்
30.09.2022
வெள்ளிக்கிழமை
தீர்த்தோற்சவம்
09.10.2022
ஞாயிற்றுக்கிழமை
மட்டக்களப்பு - ஏறாவூர் - 05ம் குறிச்சி
திருவருள்மிகு ஸ்ரீ மதுமலர்க்கா வீரபத்திரர் சுவாமி
தேவஸ்தான மகோற்சவம் - 2022

மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில்

கவிக்கோ வெல்லவூர்க் கோபால் அவர்களின்

# கொக்கட்டிச்சோலைக் குறவஞ்சி

# நூல் வெளியீடு

**இடம்**

மட்டக்களப்புத் தமிழ்ச்சங்க மண்டபம், பிள்ளையாரடி

**காலம்**

08.10.2022 சனிக்கிழமை மு.ப 10.00மணி

**தலைமை**

சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி அவர்கள்
தலைவர், மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்

**முன்னிலை**

பேராசிரியர் மா.செல்வராஜா அவர்கள்,
வேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் வ.கனகசிங்கம் அவர்கள்,
உபவேந்தர், கிழக்குப் பல்கலைக்கழகம்

**முதன்மை அதிதிகள்**

திரு.க.கருணாகரன் அவர்கள்,
அரச அதிபர், மட்டக்களப்பு

கலாநிதி பாரதி கென்னடி அவர்கள்,
சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள்
நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்

**கௌரவ அதிதிகள்**

திரு.இ.மேகராசா அவர்கள்
தலைவர்

திரு.சீ.கங்காதரன் அவர்கள்
செயலாளர்

திரு.ச.கோகுலகிருஷ்னன் அவர்கள்
பொருளாளர்

அருள்மிகு கொக்கட்டிச்சோலை தான்தோன்றீச்சரம்

**முதற்பிரதி பெறுனர்**

சிரேஷ்ட சட்டத்தரணி க.நாராயணபிள்ளை அவர்கள்

**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு**

திரு.க.தியாகராசா JP அவர்கள்,
பொருளாளர், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்

## நிகழ்வுகள்

காலை 10.00 மங்கல விளக்கேற்றல்

10.10 தமிழ்மொழி வாழ்த்து
திரு.கு.வினாயகமூர்த்தி அவர்கள்
செயற்குழு உறுப்பினர்,
மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்

10.15 வரவேற்புரை
சட்டத்தரணி மு.கணேசராசா அவர்கள்
பொதுச் செயலாளர்,
மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்

10.25 தலைமையுரை

10.40 நூல் வெளியீட்டுரை
கலாநிதி தாக்ஷாயினீ பரமதேவன் அவர்கள்,
தலைவர், நடனநாடக அரங்கியல் துறை,
சு.வி.அ.க.நிறுவகம்,கிழக்குப் பல்கலைக்கழகம்

10.55 நூல் வெளியீடும் பிரதிகள் வழங்கலும்


11.15 நூல் நயவுரை
திரு. க.மோனதாஸன் அவர்கள்,
சிரேஷ்ட விரிவுரையாளர்,
சு.வி.அ.க.நிறுவகம்,கிழக்குப் பல்கலைக்கழகம்

11.35 அதிதிகள் உரை

12.45 நூலாசிரியர் ஏற்புரை

12.55 நன்றியுரை
திரு.இரா.பிரதீஸ்காந்த் அவர்கள்
துணைச் செயலாளர்,
மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்

நிகழ்ச்சித் தொகுப்பு
கதிரவன் த.இன்பராசா
செயற்குழு உறுப்பினர்,
மட்டக்களப்புத் தமிழ்ச்சங்கம்



நிகழ்வில் கலந்து சிறப்பிக்க
தங்களை இருகரம்கூப்பி
அழைக்கின்றோம்.

சிறப்பு விலை: ரூபா 500.00